# தேர்தல் ஆட்சேபனையில் வடக்கு முன்னணியில்!

Registered as a News Paqer in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 12
இதழ் 130
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்    ஆனி 7    ரபி. ஆகிர் 16    ஞாயிற்றுக்கிழமை    [21-6-70]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக, தேர்தல் ஆட்சேபமனு தாக்கல் செய்வதில், வடபகுதியே முன்னணிவகிக்கிறது. மன்னார், பருத்தித்துறை, வவனிய தொகுதிகளின்தேர்தல் ஆட்சேப மனுக்கள் ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. சி எக்ஸ். மார்ட்டினின் தெரிவை ஆட்சேபித்து. வாக்குகளை திரும்பவும் எண்ணவேண்டுமெனக் கோரி மனுவொன்றை தாக்கல் செய்யவிருப்பதாக திரு திரு. ஏ. ரி துரையப்பா தெரிவித்துள்ளார். இதுசம்பந்தமாக திரு. துரையப்பா நேற்று கொழும்பு சென்றுள்ளார்.

வட்டுக்கோட்டை எம் பி. கிளிநொச்சி எம். பி., நல்லூர் எம். பி. ஆகியோரின் தெரிவை ஆட்சேபித்து மனுக்கள் தாக்கல் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவதாக அறியப்படுகிறது,

தேர்தல் ஆட்சேப மனுக்கள் தாக்கல் செய்வதற்கு இன்றுதான் கடைசித்தின மாகும்,

யாழ்ப்பாணத்திற்கு

## அமைச்சர் கொப்பேகடுவவை அழைக்க ஏற்பாடு

மாவிட்டபுரம், சனி
அமைச்சர் கொப்பேகடுவ அடுத்த மாதம் 1-ம் திகதி யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

70—71-ம் ஆண்டிற்கான கமத்தொழில் செயற்திட்டங்கள் பற்றி ஆராய விவசாய அமைச்சர் ஆர். பி. கொப்பேகடுவவை யாழ். நகருக்கு அழைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நெல் மிளகாய், வெங்காயம் உட்பட மற்றும் உபஉணவு பயிர்களை அபிவிருத்திசெய்ய எடுக்கவேண்டிய செயல் திட்டங்கள் பற்றி ஆராய ஜூலை மாதம் 1ம் திகதி யாழ். அரசாங்க செயலகத்தில் ஒரு மகாநாடு நடைபெறவிருக்கிறது.

இச்செயற் திட்டங்கள் பற்றி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய உதவி அதிகாரிகள் இம்மாதம் 23-ம் திகதி கூடி பூர்வாங்கமாக ஆராயவிருக்கின்றனர்.

# சட்ட விதிகளுக்கு அமைய மக்கள் கமிட்டிகள் இயங்கும்

## அமைச்சர் பீலிக்ஸ் திட்டங்களை தயாரிக்கிறார்

கோட்டை, சனி
புதிய அரசாங்கம் நிறுவ இருக்கும் மக்கள் கமிட்டிகள் குறிப்பிட்ட சில சட்டவிதிகளின்அடிப்படையிலேயே இயங்கு பவையாக விருக்கும் என்று பொதுநிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டமைச்சைச்சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த மக்கள் கமிட்டிகளின் கடமைகள், அவை இயங்கவேண்டிய முறைகள் ஆகியவை சம்பந்தமாக இப்பொழுது சட்டவிதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை இன்னும் இரண்டு வாரங்களுக்கிடையில் தயாரிக்கப்பட்டுவிடும் என்று தெரிகின்றது.

இந்த சட்டதிட்டங்களை இப்பொழுது உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா தயாரித்துவருவதாகவும் இவை தயாரானதும் அரசாங்கத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும். என்று தெரிய வருகின்றது.

இப்பொழுது அரசாங்க இலாகாக்களிலும், காரியாலயங்களிலும் இருந்துவரும் ...

## வடமராட்சி பாடசாலை ஆசிரியர்களின் நிதி உதவி

### 'நாட்டைக் காப்பாற்றுங்கள்' நிதிக்கு

பருத்தித்துறை,சனி
பருத்தித்துறை நகரத்தைச்சேர்ந்த இருபாடசாலை ஆசிரியர்கள் தங்கள் ஒரு நாள் சம்பளத்தை அரசாங்கத்தின் 'நாட்டைக் காப்பாற்றுங்கள்' நிதிக்கு அளிக்க முன்வந்துள்ளனர். புலோலி இந்து ஆண்கள் கல்லூரி அதிபர் திரு எம் ஏ தங்கராசாவும், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கே சரவணமுத்துவும் தங்கள்உதவி ஆசிரியர்களின் ஒரு நாள் சம்பளத்தைக் கழித்து, அரசாங்கத்துக்கு அனுப்புமாறு வடமாநிலக் கல்வியதிபதி திரு. எஸ் தணிகாசலத்துக்கு அறிவித்துள்ளனர் இதைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியிலுள்ள மற்றும் கல்லூரிகளும் அரசாங்கத்திற்கு நிதியுதவ முன்வர விருப்பதாகத் தெரிகிறது. பருத்தித்துறைப் பகுதியிலுள்ள தனிப்பட்ட வர்த்தகரும் குறிப்பிடக் கூடியளவு நிதியுதவி செய்ய விருப்பதாக அறியக்கிடக்கிறது.

கொடிகாமம்

## பஸ் சாரதி கொலை வழக்கு ஜூலை 12-ம் திகதி விசாரணை

## 6 எதிரிகளும் விடுதலை!

### குடத்தனைக் கொலை வழக்கில்

அம்பன்,சனி
குடத்தனை துப்பாக்கி சூட்டு கொலை வழக்கில் எதிரிகள் ஆறுபேரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் ... தாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

1ம், 2ம், 3ம், எதிரிகள் சார்பில்அட்வகேட் கே வி எஸ். சண்முகநாதன் புறக்டர் வி செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானர். 4ம், 5ம், 6ம், எதிரிகள் சார் ...

உற்பத்தி வரி

## கட்டும்படி வழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு
உற்பத்திவரி கட்டும்படி சுருட்டு உற்பத்தியாளர் சங்க தலைவர் மீதும் மற்றும் உறுப்பினர் மீதும்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1963ம் ஆண்டு முதல் 1967ம் ஆண்டுவரை உற்பத்திவரியாக 3வீதமும் 5வீதமும் கட்டத்தவறியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# நடப்பு வருடத்துக்கு ரூ.10 கோடி தேவை

## டாக்டர் பெரேரா அறிவிப்பு

கோட்டை, சனி
நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சின் பொறியியல் சேவை திருத்தி அமைக்கப்படவுள்ளது. இந்த முடிவை அதன் அமைச்சர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா அறிவித்துள்ளார்.

பொறியியல் சேவையைத் திருத்தி அமைக்க மூன்று நிரந்தரக் காரியதரிசிகள் நியமிக்கப்படவுள்ளனர். ஒரு என்ஜினியரும் நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்படுவார்.

திட்டங்கள் தயாரிப்பதற்கு ஒரு அதிபரும் நியமிக்கப்படவுள்ளார்.

வடக்கில் ஐக்கிய முன்னனி

## 'தமிழ் பேசும் மக்களை திசைதிருப்புவதே நோக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
வடபகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்களின் ஆதரவை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மக்கள் அரசாங்கத்தின் பககம் திரட்டுவதற்காகவே வடபகுதி ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய முன்னணி அமைப்பாளர் திரு, எம், நடராசா நேற்று தெரிவித்தார்.

வடபகுதியின் அபிவிருத்தி வேலைகளிலும் மக்களின் குறைதீர்ப்பதிலும் ஐக்கிய ...

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி, இஸ்லாமிய சோஷலிச முன்னணி சிறுபான்மைத் தமிழர் மகாசபை அடங்கிய வடபகுதி ஐக்கிய முன்னணியொன்று நிறுவப்பட்டுள்ளது.

இம்முன்னணியின் தலைவராக தபால் மந்திரி திரு. சி. குமாரசூரியர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இணைப்புச் செயலாளர்களாக திரு. எம். நடராசா, ஏ, விஸ்வநாதன், ஏ. வைத்திலிங்கம் ஆகியோரும் ...

## மாணவிகள் கஷ்டம்

பச்சிலைப்பள்ளி, சனி
இப்பகுதிகளிலுள்ள கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, போக்கறப்பு அரசினர் தமிழ் கலவன்பாடசாலைஆகியவற்றில் ஆசிரியைகள் இல்லாததினால் மேற்படி பாடசாலைகளில் கல்வி பயிலும் பெண்பிள்ளைகள் தையல், கைப்பணி முதலியபாடங்கள் பயில முடியாத நிலையிலுள்ளனர். இதுபற்றி மேலதி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்களின் ஒரு நாள் சம்ப அறியக்கிடக்கிறது.

கொடிகாமம்

# பஸ் சாரதி கொலை வழக்கு ஜுலை 12-ம் திகதி விசாரணை

யாழ்ப்பாணம், சனி. கொடிகாமம் பஸ் சாரதி வேலு கொலைவழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாட்சியமளிக்க முதலில் அரசாங்க ரசாயன பரிசோதகரை அழைக்க விருப்பதால் தவணைதரும்படி சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என். கதிர்காமநாதன் கேட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட், விசாரணையை அடுத்த மாதம் 12-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இவ்வழக்கில் கொடிகாமம் பஸ் நிலையத்தில், பஸ் சாரதி வேலுவை, தம்பிமுத்து கணேசமூர்த்தி, தம்பிமுத்து நவரத்தினம், பெருமாள் இராமலிங்கம் ஆகியோர் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும், வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

1-ம் 2-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ஜே. பி. சௌபிம், புறக்டர் எஸ். அம்பலவாணர், புறக்டர் எஸ். பி. மயில்வாகனம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 3-ம் எதிரி சார்பில் அட்வகேட் எஸ். தம்பிரத்தினம், புறக்டர் வி. பி. கார்த்திகேசுவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

# விவசாயப் படை வீரர்கள் மயிரிழையில் உயிர்தப்பினர்

விஸ்வமடு, சனி

விவசாயப்படை வீரர்கள் மயிரிழையில் உயிர்தப்பினர்.

விஸ்வமடு விவசாயப் படை வீரர்கள் நிலத்தடியில் பத்து அடி ஆழத்தில் பாலவேலையைச் செய்து கொண்டிருந்தபோது அந்த நிலை இவர்களுக்கு ஏற்பட்டது.

வேலை செய்து கொண்டிருந்தபோது திடீரென மண் சரிவு ஏற்பட்டது. அந்தச் சமயம் இவர்கள் பாய்ந்து உயிரைப் பாதுகாத்துக் கொண்டனர்.

மண்சரிவு ஏற்பட்டதை விஸ்வமடு விவசாயப்படை அதிகாரி உரிய நேரத்தில் வீரர்களுக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து இவர்கள் தப்பமுடிந்தது.

## இன்று தேர்

அராலி, ஞாயிறு

அராலி வடக்கு மயிலியப்புலக்கந்தசுவாமியார் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக அலங்காரத் தேரில் பவனி வருவார்.

அம்பன், சனி

குடத்தனை துப்பாக்கி சூட்டு கொலை வழக்கில் எதிரிகள் ஆறுபேரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கடந்த பெப்ரவரி மாதம் துன்னாலையைச் சேர்ந்த நாகன் சின்னப்பன், வல்லி ஆறுமுகம், தம்பன் செல்லத்துரை, தம்பன் செல்லக்கிளி, கணேசன் கனகன், சங்கரன் தளையசிங்கம் ஆகிய 6பேரும், குடத்தனையைச் சேர்ந்த சின்னக்குட்டி பெண் வள்ளி என்ற வயோதிபமாதை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம், 3ம், எதிரிகள் சார்பில் அட்வகேட் கே வி எஸ். சண்முகநாதன் புறக்டர் வி செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார். 4ம், 5ம், 6ம் எதிரிகள் சார்பில் புறக்டர் வி செல்லத்தம்பி ஆஜரானார்.

வழக்காளி தரப்பில், அட்வகேட் எம் மோதிலால் நேரு. புறக்டர் என் நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

விசாரணை முடிவில் சாட்சியங்களின் முரண்பாடு காரணமாக எதிரிகள் ஆறுபேரும் குற்றவாளிகளல்லவெனத் தீர்ப்பளித்து எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

# ஜோர்ஜ் மன்னர் உருவத்தை தங்கத்தில் தயாரித்தாராம்

## பொலிஸ் பரிசிலனை செய்கிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஜோர்ஜ் மன்னனின் உருவப்படத்தைக் கொண்ட சில் தங்கம் தயாரித்ததாக சந்தேகத்தின் பேரில் பொலிசார் ஒருவரை விசாரணை செய்து வருகின்றனர். அவரிடமிருந்த 150 தங்க நாணயங்களை பொலிசார் பரிசிலனை செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் இப்படியான இங்கிலாந்து மன்னனின் உருவப்படத்தைக் கொண்ட தங்கம் தயாரிக்கப்பட்டு கூடிய விலைக்கு விற்கப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இங்கிலாந்து அரசரின் உருவப்படத்தைக் கொண்ட உண்மையான தங்கம் தற்பொழுது இந்நாட்டில் பாவனையில் இல்லையென்றும், இப்படி மோசடி செய்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

முருகன், லட்சுமி போன்ற தெய்வங்களின் படங்களையும், சாயிபாபாவின் படங்களையும் தங்க நாணயத்தில் அமைப்பதற்கு மட்டுமே அவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

...துவருவதாகவும் இவை தயாரானதும் அரசாங்கத்தின் பரிசிலனைக்கு சமர்ப்பிக்கப்படும். என்று தெரிய வருகின்றது.

இப்பொழுது அரசாங்க இலாகாக்களிலும், காரியாலயங்களிலும் இருந்துவரும் அமைப்புகளினால் ஏற்படும் சிரமங்களைப் போக்கும் வகையில் மக்கள் கமிட்டிகளுக்கான சட்டதிட்டங்களை உடனடியாக தயாரித்து முடிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

## கூப்பன் துணி பதுக்கல்

## மோசடி அம்பலம்!

கோட்டை, சனி

கூப்பனுக்கு வழங்கப் படுவதற்கான பத்தாயிரம் யார் துணி பதுக்கி வைத்திருந்தது கண்டு பிடிக்கப் பட்டது.

புறக்கோட்டையில் தனியாருக்குச் சொந்தமான அறையொன்றில் இந்தத் துணி பதுக்கி வைக்கப் பட்டிருந்தது.

லங்கா சலுசலா தலைவர் இது சம்பந்தமாக விசாரணை நடத்தியிருக்கிறார்.

## கடும் சண்டை

நாம்பன், ஜுன் 20

கம்போடிய தலைநகரான நாம்பனில் கடும் சண்டை நடந்து கொண்ருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஐக்கிய முன்னணி அமைப்பாளர் திரு. எம், நடராசா நேற்று தெரிவித்தார்.

வடபகுதியின் அபிவிருத்வேலைகளிலும் மக்களின் குறைதீர்ப்பதிலும் ஐக்கிய முன்னணி தவனம் செலுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

...ராக தபால் மந்திரி திரு. சி. குமாரசூரியர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இணைப்புச் செயலாளர்களாக திரு. எம். நடராசா, ஏ, விஸ்வநாதன், ஏ. வைத்திலிங்கம் ஆகியோரும் அமைப்பாளராக திரு எம். நடராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்,

...னால் மேற்படி பாடசாலைகளில் கல்வி பயிலும் பெண் பிள்ளைகள் தையல்,' கைப்பணி முதலியபாடங்கள் பயில முடியாத நிலையிலுள்ளனர். இதுபற்றி மேலதிகாரிகளுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது.

இம் மாதம் 26-ம் திகதி

# அமைச்சர் குமாரசூரியருக்கு யாழ். நகரில் வரவேற்பு

## மந்திரிகள் கெனமனும் லெஸ்லியும் வருகின்றனர்

யாழ்ப்பாணம். ஞாயிறு

மக்கள் அரசாங்கம் அமைககப்பட்ட பின்னர் முதல் தடவையாக வடபகுதிககு தபால் மந்திரி திரு. செல்லையா குமாரசூரியர் இம்மாதம் 26.ம் திகதி விஜயம் செய்கின்றார்.

அன்றுகாலை 8-30 மணிககு திரு. குமாரசூரியர் பலாலி விமானநிலையத்தில் வந்திறங்குவார். அவருடன் நியமன எம். பி. யும் ஜனநாபகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனுப் அஸீசும் வருவார். விமான நிலையத்தில் வரவேற்பு அளிப்பதற்கான ஒழுங்குகளை ஐக்கிய முன்னணி செய்து வருகிறது.

விமான நிலையத்திலிருந்து மோட்டாரில் ஊர்வலமாக காங்கேசன்துறை விடுதிச் சாலைக்கு அழைத்துச்செல்லப்படுவர்.

அன்றுமாலை 4 மணிக்கு நாச்சிமார் கோவிலடியிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பிரப்பங்குளம் வீதிவழியாக முஸ்லிம் வட்டாரம். பெரியகடை வழியாக யாழ் முற்றவெளி மைதானத்தை வந்தடையும்

எம். ஸி. யும் அஸீசும்

யாழ்ப்பாணம்முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் கூட்டத்தில் தபால் மந்திரி திரு. குமாரசூரியர், நியமன எம். பி. திரு எம். சி. சுப்பிரமணியம். ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனுப் அஸீஸ் ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்படும். இந்த வரவேற்பில் தபால்தந்திப் பகுதி ஊழியர்கள், பஸ் தொழிலாளர்கள், ஆஸ்பத்திரிஊழியர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

திரு. விஸ்வநாதன் தலைமையில்நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் வீடமைப்பு மந்திரி திரு. பீட்டர் கெனமன். போக்குவரத்து மந்திரி திரு. லெஸ்லி குணவர்த்தன, மூதூர் எம். பி. யும் உதவி மந்திரியுமான ஜனும் ஏ. எல். மஜீத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

(4- ம் பக்கம் பார்க்க

# அவர்கள் மீண்டும் மக்களை ஏமாற்ற முடியவில்லை

— பிரதமர்

அத்தனகல, சனி

மக்களை மீண்டும் 'லேக ஹவுஸ்' நிறுவனத்தால் ஏமாற்றமுடியாது என்ற உண்மை கடந்த பொதுத் தேர்தலின்போது நன்ருகத் தெளிவாகிவிட்டது என்று பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அத்தனகலைத் தொகுதியில் இடம்பெற்ற பல வரவேற்புக் கூட்டங்களில் குறிப்பிட்டார்.

பொதுமக்களின் கண்களில் மண்ணைத் தூவி மீண்டும் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்திடம் நாட்டின் அதிகாரத்தை ஒப்படைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு மக்கள் நல்லமுறையில் பதிலளித்திருக்கிருர்கள் என்று திருமதி பண்டாரநாயக்கா கூறினர்.

பிரதம மந்திரியை வரவேற்பதற்காக அத்தனகலையிலும், மற்ற நகரங்களிலும் விசேஷ அலங்காரத் தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வழிகள்தோறும் சிவப்பு, நீலக கொடிகளால் அலங்கரிககப் பட்டிருந்தது.

கூட்டணிக்கட்சிகளை வெற்றியீட்டச்செய்து தம்மைப் பிரதம மந்திரியாக்குவதற்கு மக்கள் எடுத்த முடிவைத் தாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்ட பிரதம மந்திரி தமது மக்கள் இப்பொழுது முழு உலகத்துக்குமே எடுத்துக்காட்டாக விளங்குகிருர்கள் என்றும் குறிப்பிட்டார்.

## 'ஐ. நா. கோட்பாட்டை மீறுகின்றன'

—கொஸிஜின்

மாஸ்கோ. ஜுன் 20

தேசிய விடுதலை இயக்கங்களை மேற்கு நாடுகள் அடக்கி ஒடுக்கி விடுகின்றன. ஐ. நா, கோட்பாடுகளை மீறி விடுகின்றன' என்று ரஷ்யப் பிரதமர் திரு கொஸியின் மாஸ்கோ வந்துள்ள ஐ நா. பொதுக் காரியதரிசி யுதாண்டை வரவேற்றுப் பேசுகையில் கூறினர்.

உலக சமாதானத்துக்கு ரஷ்யா உதவ வேண்டுமென்று யுதாண்ட் வற்புறுத்தினர்.

# முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கே கூட்டணி ஆட்சி ஏற்பட்டது

— விவியன் குணவர்த்தன

தெஹிவளை, சனி

இந்த நாட்டிலுள்ள முதலாளித்துவ அமைப்பை உடைத்து நொறுக்குவதற்காகவே மக்கள் அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. என்று கருதவேண்டும் என்றும்கூட்டணிக்கட்சிகளின் ஒருங்கிணைப்பின் மூலமே இந்த வெற்றி கிட்டியது என்றும் தம்மை வரவேற்பதற்காக நடைபெற்ற கூட்டமொன்றில்பேசுகையில் கல்கிசை பாராளுமன்ற உறுப்பினர் திரு. மதிவிவியன் குணவர்தன கூறினார்.

தென்கொழும்பு பெரியாஸ்பத்திரி ஊழியர்களால் அவருக்குவரவேற்பு அளிக்கப்பட்டது.

புராதன சிங்கள அரசர்கள் விவசாயத்தைப் பேணுவதற்காக பெரும் குளங்களைக்கட்டியும் வேறு வகையிலும் பணிபுரிந்தார்கள். இதற்கு உணவுப்பிரச்னை தான் மிக முக்கியமானது என்று அவர்கள் உணர்ந்திருந்தது தான் காரணம்.

தோல்வியுற்ற அரசாங்கம் உணவு உற்பத்தியைப்பெருக்குவதாக பிரசாரம் செய்து கொண்டு ஒருகொத்து அரிசியைக் கூடவெட்டிவிட்டது. இந்த நாட்டில் முதலாளித்துவ அமைப்பை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்காகவே மக்கள் கூட்டணிகட்சிகளை பதவிக்கு அனுப்பியிருக்கிருர்கள் என்று திருமதி விவியன்குணவர்தனமேலும் குறிப்பிட்டார்.

# நீர்ப்பாசன 'பொறியியல சேவை திருத்தப்படும்

கோட்டை, ஞாயிறு

நடப்பு வருடத்துக்கு பத்துக்கோடி ரூபாய் தேவைப்படுகிறதென நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்திருக்கிறார், அடுத்த வருட பட்ஜட்டுக்குள் 2 கோடி 90 லட்சம் ரூபாய் தேவைப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

வருமானவரி போன்றவற்றால் 2 கோடி 20 லட்சம் ரூபாய் இதுவரை கிடைத்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

'நாட்டைக் காப்பாற்றுங்கள்' நிதிமூலம் கூடியளவு பணம் கிடைக்குமென டாக்டர் பெரேரா நம்புகிறார்,

## கிளைகள் நிறுவ முயற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாவகச்சேரித் தொகுதியில் சுதந்திரக்கட்சிக் கிளைகள் நிறுவுவதற்கானமுயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இது சம்பந்தமாகக் கிளை அமைப்பாளர் திரு. எம் நடராசாவுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

(குவிம

## வரி விளம்பரம்

### தேவை

வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் சில தகவல்களைச் சேகரிப்பதற்கு ஆர்வமுள்ள பெண்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஒரு கிராமத்துக்கு ஒருவர் மட்டும் தெரிவு செய்யப்படுவர். (விண்ணப்ப முடிவு 30-6-70) FLOATERS, 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2156

ஸ்ருடியோவில் கடமையாற்றுவதற்கு சகல வேலைகளிலும் அனுபவம் வாய்ந்த ஒரு உதவியாளர் தேவை. 30-6-70-க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 2157, மே/பா 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம். 2157

பெண்களை நிர்வகிக்கக் கூடிய கணக்கு அனுபவமுள்ள பெண் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல.3107, மே/பா 'ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம். 3107

### விற்பனைக்கு

கார்

நல்ல நிலைமையிலுள்ள CY 7000 தொடர்பிலக்கமுள்ள 'ஒஸ்டீன் 16 X 4' விற்பனைக்கு உண்டு. மொடோன் பேணிச்சர் 79/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3112

வேலணைகிழக்கு அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் மண்கும்பான்-வேலணை பஸ் போக்குவரத்து வீதியிலுள்ள 188 பனைகளுள்ள 22 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நேரில் விசாரிக்கலாம். சாயிறைக்கிளீனேஸ், வெலிங்டன் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம். தொலைபேசித்தொடர்பு474 3103

காணி

6 பரப்பு குடி நிலம் திருநெல்வேலி வட்டாரத்தில் பலாலி வீதிக்கு அருகாமையில், சந்தைக்கும் கமத்தொழில் பள்ளிக்கூடத்திற்குமிடையில் விரும்பத்தக்கது தொடர்பு: வே. கணபதிப்பிள்ளை, 11, கற்பகவிநாயகர் வீதி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம். 3108

நெற்காணி

கிளிநொச்சி ஏழாம் வாய்க்காலில் இருக்கும், நீர்ப்பாசன வசதியுள்ள பத்து ஏக்கர் நெற்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. விண்

## கேள்வி விளம்பரம்

சுழிபுரம் கிராம சபைத் தலைவரால் கண்ணகி அம்மன் றேட்டு வேலைக்கான சீல்வைத்த கேள்விகள் 29-6-70 காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுக்காசு ரூபா 50ம் கேள்விப்பத்திரக்கிரயமாக ரூபா 5/ம் சுழிபுரம் கிராமசபை அலுவலகத்தில் செலுத்தியதன்மேல் 27-6-70 மாலை 4-30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் சுழிபுரம் கிராம சபைஅலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சு. கந்தசுவாமி,
தலைவர்,
சுழிபுரம் கிராமசபை

17-6-70 2318

## தாச்சிப் போட்டி

அல்லைப்பிட்டி, சனி

வேலணை ஐக்கியவிளையாட்டுக் கழகத்தினரால் திரு. வா அருணகிரி ஜே. பியின் வெற்றிக் கேடயதிற்காக நடைபெற்றுவரும் தாச்சி சுற்றுப்போட்டியில்வேலணை தேவி கோட்டம் சனசமூக நிலைய 'ஏ' பிரிவு கோஷ்டியினரும், செட்டிபுலம் சனசமூக நிலைய 'ஏ' பிரிவு கோஷ்டியினரும் மோதிக் கொண்டனர். ஈற்றில் 14--7 புள்ளிகளால்செட்டிபுலம் கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

இறுதிஆட்டமும் பரிசில் வழங்கலும் அடுத்த மாதம் 2ந் திகதி மேற்படிகழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. இதில் வேலணை ஐக்கிய விளையாட்டுக்கழகமும்செட்டிபுலம்சன சமூக நிலையக் கோஷ்டியினரும் மோதுவர்.

## விற்பனைக்கு

கார்

ஆஸ்ரின் சமர்செற் கார் EY 9616 யாவும் புதிய சாமான்களுடன் திருத்தியமைத்தும் புதிய பற்றறி, 4 புதிய ரயர்களுடனும் விற்பனைக்கு உண்டு. விபரம் நேரில், செல்லம் ஸ்டோர்ஸ், 154, மெத்தைக் கடை, பருத்தித்துறை. 3111

## தவறிவிட்டது

17-6-70 புதன்கிழமை காலை சங்கானையிலிருந்து சங்குவேலி, உரும்பிராய், கோப்பாய், கைதடி வீதியால் வரும்பொழுது உடுப்புகள் அடங்கிய ரவலிங்பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு

## கேள்வி பற்றிய அறிவித்தல்

மேல்பற்று வடக்கு கிராம சபைத் தலைவரால் 27-6-70 மாலை 4-30 மணி வரை பெரிய இத்திமடு நல்லிமுறிப்பு கழிக்காடு றேட்டு. பெரியகுளம் கீழ்க்காடு றேட்டு ஆகிய வேலைக்கு சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பிணையாக முறையே ரூபா 75/-ம் கேள்விப்பத்திரப்பணமாக முறையே ரூபா 15ம் செலுத்துவதன் பேரில் மேல்பற்று வடக்கு கிராமசபைத் தலைவரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமானபத்திரத்திலேயே கேள்விகள் கேட்கப்படுதல்வேண்டும். கேள்விப்பத்திரப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரங்கள் யாவும் இக்கந்தோரில் 24-6-70 பி. ப. 4-30 மணிவரை வழங்கப்படும். விபரங்கள் யாவும் இக்கந்தோரிலும் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கந்தோரிலும் பணிபுரியும் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சி. உ. சிவராசா ஜே. பி.
தலைவர், கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
ஒட்டுசுட்டான்.

16-6-70 2319

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
## 21-6-70 ஞாயிறு

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 61 மீ.

12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

மாலை4-25கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர், இரவு 6-10 மெல்லிசை, 6-15 இசைப்பயிற்சி, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 வீணைஇசை, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம்,

## கல்லூரி இல்லப் போட்டி

# உலக உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணம் யாருக்கு?

## மெக்ஸிக்கோவில் இன்று நடக்கும் இறுதி மோதல்!

மெக்ஸிக்கோவில் கடந்த 22 நாட்களாக நடைபெற்று வந்த உலக உதைபந்தாட்டப் போட்டியின், இறுதி சாம்பியன் ஆட்டம் இன்று மெக்ஸிககோ 'ஜெலிஸ்கோ' விளையாட்டரங்கில் நடைபெறுகின்றது. இந்த இறுதியாட்டத்தில். பிரேஸில், இத்தாலி ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன.

இந்த இறுதிப் போட்டி நடைபெறும் விளையாட்டரங்கில், ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் நேரடியாகஇப்போட்டியைக்கண்டு களிக்க இடமுண்டு. இவை தவிர 25 ஐரோப்பிய நாடுகள் உட்பட, 42 நாடுகளில் இப்போட்டியைப் பற்றிய மறு ஒலிபரப்பு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலகின் பல்வேறு நாடுகளிலும் 400 கோடி மக்கள் இப்போட்டியை டெலிவிஷனிலும் பார்ப்பதற்கும் சர்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் இந்த இறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் பிரேஸிலும், இத்தாலியும்ஏற்கனவே இரண்டு முறைகள், உலக உதைபந்தாட்டக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன. 1934ம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற போட்டியிலும் 1938-ம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்ற போட்டியிலும் இத்தாலி வெற்றிபெற்றுள்ளது. 1958-ம் ஆண்டு சுவீடனில் நடைபெற்ற போட்டியிலும், 1962ம் ஆண்டு சில்லியில் நடைபெற்ற போட்டியிலும் பிரேஸில் வெற்றி பெற்றிருக்கின்றது.

இம்முறை இந்த இரண்டு கோஷ்டிகளில் யார் வெற்றி பெறுவார்கள் என்று தற்போதையநிலையில் நிச்சயமாகக்கூறமுடியாதிருக்கின்றது. இந்தச் சுற்றுப்போட்டியின் ஆரம்பத்தில், பிரேஸில்தான் சாம்பியனாக வரலாம் என கூறியிருந்த போதிலும், சென்ற உலக சாம்பியனான இங்கிலாந்துக் கோஷ்டியை வெற்றி கொண்ட மேற்கு ஜெர்மனியை, இத்தாலி கோஷ்டி வெற்றி பெற்றதினால்தான். இத்தாலிக்கோஷ்டிக்கும், தற்போது பிரேஸில் கோஷ்டி பயப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



இன்று இறுதிப் போட்டியில் மோதுகின்றது

### இத்தாலி கோஷ்டி பற்றி

இத்தாலி கோஷ்டியினர் 1962-ம் ஆண்டு தமது நாட்டில் இங்கிலாந்துடன் விளையாடி தோல்வி பெற்ற தொன்றைத் தவிர இதுவரை தமது சொந்த தேசத்தில் விளையாடிய ஆட்டங்களில் ஒன்றிலுமேனும் தோல்வியடையவில்லை. மேலும் இப்பிரிவினுள் பலம் வாய்ந்த கோஷ்டியாகவிளங்கிய கிழக்கு ஜெர்மன் கோஷ்டியையும் அம்பியன்ரி'யின் அபரா ஆட்டத்தின் மூலம் சுலபமாக தோற்கடித்தது.

இத்தாலிக் கோஷ்டியினர், இம்முறை மெக்ஸிக்கோவில் கலந்து கொண்ட முதல் மூன்று ஆட்டங்களிலும் மிகக் குறைந்த புள்ளிகளால் வெற்றி பெற்று, கால் இறுதிப் போட்டிக்கு வந்திருந்ததினால், இந்த கோஷ்டியினரை மற்றைய கோஷ்டியினர் மிக இலகுவில் வெற்றி பெறலாம் என்ற எண்ணத்துடன் போட்டியிட்ட மெக்ஸிக்கோ கோஷ்டியும், இங்கிலாந்தை வெற்றி கண்ட மேற்கு ஜெர்மனிக கோஷ்டியும் படுதோல்வியடைந்தன.

இம்முறை மெக்ஸிக்கோவில் போட்டியிட்ட கோஷ்டிகள் அனைத்தினையும் விட, இத்தாலிக் கோஷ்டியின் பின்னணி வீரர்களே மிகவும் பலம் வாய்ந்த வீரர்கள், என உலக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

இத்தாலி கோஷ்டியின் உயிர் நாடியாக விளங்குபவர், உலகப் புகள்பெற்ற வீரர் 'நிவா'வேதான். இவர் கோல்கள் போடுவதில் பெரும் சூரர்.

உலக வெற்றிக் கிண்ணத்துக்கான ஆரம்ப போட்டியில், வேல்சையும், மெக்ஸிக்கோவையும், இக் கோஷ்டியின் பயிற்சியாளரான 'பெறுக்கியோ வல்கியர்'ரின் கடுமையான பயிற்சியின் மூலம் தோற்கடித்தமையே உலக அரங்கில் இத்தாலி கோஷ்டிக்கு ஏனைய நாடுகள் பயப்பட காரணமாகும்.

## சமய அறிவுப் போட்டி முடிவுகள்

கோப்பாய், சனி

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி முடிவுகள் வருமாறு; போட்டியில் வெற்றி பெற்றோருக்கு திரு கே. பிஹரன் பரிசில்களை வழங்கினார். முதலாவது பரிசு: செல்வி.வி.சி.ரத்தினமாலா, இரண்டாவது பரிசு: அ. கனகசூரியர், மூன்றாவது பரிசு: த.வசந்தா.

புத்தகப்பரிசில்கள் பெறுவோர்: இரா புவனேஸ்வரி, புஷ்பா மூக்கப்பிள்ளை, கே. விஷ்ணுமோகன், எம் பரமானந்தம், கே சிமாட்டி, வி. மனோகரன், என் பாலசுப்பிரமணியசர்மா, எஸ் சுகந்தா, ரி அன்னலட்சுமி, கே திருப்பதி. பி வீராசாமி, ஏ. லோகாம்பாள், கே ராஜேஸ்வரி.

சான்றிதழ் பெறுவோர்: வி சுந்தரலிங்கம், ஐ யோகலட்சுமி, ஏ சந்திரா, வி கலாதேவி, ஆர் யோகலட்சுமி, வி செந்தாமரை, ஆர் தனபாலசிங்கம், ஆர் ஜெகதீஸ்வரி, எஸ் கலையரசி, கே. லோகாம்பாள், ரி செல்வமணி, ஆர் தேவமனோகரி, பி வசிந்திராதேவி, கே பத்மினி, என் சண்முகம், கே. சிவனம்மாள், ஏ. பூபாலசிங்கம், பி ராஜேந்திரன், எஸ். நாகேஸ்வரி, கே. பரமேஸ்வரி, எம் மீனும்பாள், எஸ். சர்வானந்தேஸ்வரி, கே. வரதராசன், ரி மகேசரத்தினம்.

வலி.கிழக்கு காரியாதிகாரி திரு வ.கந்தப்பிள்ளை தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

மகாஜனக் கல்லூரி

## இல்லப் போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், சனி.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சின்னையா இல்லம் இவ்வருட சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அருளம்பலம், துரையப்பா, சின்னப்பா ஆகிய இல்லங்கள் முறையே 2-ம் 3-ம் 4-ம் இடங்களையும் பெற்றன.

இவ்வருட விளையாட்டுப் போட்டியில் தடியூன்றி பாய்தலில் 9 அடி 7 அங்குலம் பாய்ந்து புதிய சாதனை ஒன்றை கே. ஸ்ரீகாந்தா ஏற்படுத்தினார். திரு. எஸ். புவனேந்திரன் உயரம் பாய்தலில் ஒரு சாதனையை நிலைநாட்டினார். அஞ்சலோட்டத்தில் சின்னப்பா இல்லம் ஒரு சாதனையை ஏற்படுத்தியது.

கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிக்கு வழக்கறிஞர் திரு. கே. ஈ. கதிர்காமலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இவ் விளையாட்டு போட்டியில் பின் வருவோர் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்கள்- கீழ்ப்பிரிவு:- பிரேமலிங்கம், மத்திய பிரிவு:- எல். சிவராசா, மேற்பிரிவு:- எஸ். சிவானந்தராசா, அதிமேற் பிரிவு:- கே. ஸ்ரீகாந்தன்.

பெண்கள் கீழ்ப் பிரிவு- எஸ். சிவபூபதி, மத்திய பிரிவு:- எல். தங்கவேணி, மேற்பிரிவு:- எஸ். பவானி

## பஸ் சேவை சீர்கேடு

அம்பன், சனி

பருத்தித்துறையிலிருந்து மந்திகை ஊடாக நாகர் கோவிலுக்கு செல்லும் பஸ் அடிக்கடி பழுதடைந்து விடுவதால் நாகர் கோயிலிலிருந்து செல்லும் பிரயாணிகளும் பெரும் கஷ்டமடைகின்றனர்.

போக்குவரத்து வசதி குறைந்த இடத்தில் இவ்வாறு நகர் கோயில் பஸ் சேவை அடிக்கடி ஸ்தம்பித்துப் போவதால் பெரும்பாலானபிரயாணிகள்அவஸ்தைப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வீதி, நல்லூர் வீதி... யாழ்ப்பாணம். 3108

நெற்காணி

கிளிநொச்சி ஏழாம் வாய்க்காலில் இருக்கும், நீர்ப்பாசன வசதியுள்ள பத்து ஏக்கர் நெற்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும் விளம்பர இல:3110,மே/பா 'ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம். 3110

17-6-70 புதன்கிழமை காலை சங்கானையிலிருந்து சங்குவேலி, உரும்பிராய், கோப்பாய், கைதடி வீதியால் வரும்பொழுது உடுப்புகள் அடங்கிய ரவலிங்பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3106

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே.ஆர்.விஜயா
நாகேஷ்—வி கே. ராமசாமி
நடித்த
## பெண்ணை வாழ விடுங்கள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி4 காட்சி
ஜெய்சங்கர்
தேவிகா, நாகேஷ்
நடித்த
## தெய்வீக உறவு

இப்பொழுது திரையிடப்படுகிறது
## வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
## எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
## நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடித்த




8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 வீணை இசை, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம்,

## கல்லூரி இல்லப் போட்டி

மானிப்பாய், சனி

மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் ஸ்கொட் இல்லம் வெற்றி பெற்று கேடயத்தைப் பெற்றுக்கொண்டது. பிக்னல் இல்லம் இரண்டாமிடத்தையும் பேஜ் இல்லம் மூன்றுமிடத்தையும் பெற்றன.

கட்டிடக்கலைஞர் திரு. துரைராஜாவும் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர்

## வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி-பத்மினி
நடித்த
## திருவருட்செல்வர்
[ஈஸ்ட்மன் கலர்]

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரி-போயா, போயா 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.
சரோஜாதேவி
நடித்த
## மாடப்புரு

## ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
[போயா, பிரிபோயா 2-30]
நாகேஷ் - ராஜ்ஶ்ரீ
நடித்த
## அனுபவிராஜா அனுபவி

## MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p. m.
Poya-Pre. Poya 10.30 a. m.
Clint Walker
Akim Tamiroff
in
THE GREAT BANK ROBBERY
(Technicolor)
(இதற்கு முன் வெளிவராத புதிய படம்)

## REGAL JAFFNA
Daily 4 Shows
Jim Brown
Raquel Welch
in
100 RIFLES
(Adults only)

ஜெர்மனியை, இத்தாலி கோஷ்டி வெற்றி பெற்றதினால்தான். இத்தாலிக்கோஷ்டிக்கும், தற்போது பிரேஸில் கோஷ்டி பயப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

— ஏ. தேவராசா —

## பிரேஸில் கோஷ்டி பற்றி

உலக உதைபந்தாட்டப் பிரியர்களதும் அவதானிகளதும் கண்களுக்கு பிரேசில் கோஷ்டி இம்முறை உலக வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிக்கொண்டு போய்விடுமென்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

"நாங்களே இம்முறை உலக வெற்றிக் கிண்ணத்தை மீண்டும் கைப்பற்றுவோம், கைப்பற்றக்கூடிய சக்திமிக்க கோஷ்டியும் எங்களிடம்தான் இருக்கின்றது" என்று பிரேஸில் கோஷ்டியின் மனேஜர் 'ஜோஓ சல்டன்கா' கூறுகிறார். மெக்ஸிக்கோ வருவதற்கு முன்னர் பிரேஸில் கோஷ்டியினர் தமது பிரிவிற்குள் நடந்த விளையாட்டுகளில் மொத்தம் 23 கோல்களை போட்டு ஓர் சாதனையை நிலைநாட்டியுள்ளார்கள். 'பராக்குவேயுடன் விளையாடிய ஆட்டத்தி பிரேஸில் 3 கோல்களை போட்டு பராக்குவேயை தோற்கடித்தது. 'சல்டன்கா' கொலம்பியாவுடன் விளையாடுவதற்காக 20 நாட்களுக்கு முன்னர் கொலம்பியாவிற்கு சென்று சீதோஸ்ண சூழ்நிலைகளில் தனது வீரர்களை பழக்குவித்தே, பின்னர் நடந்த விளையாட்டில் சுலபமாக வெற்றிபெற முடிந்தது. இக் கொள்கையையே மெக்ஸிகோவிலும் விளையாடுவதற்கு முதலில் மேற்கொண்ட கோஷ்டி பிரேஸில்தான்.

பிரேஸில் கோஷ்டி மெக்ஸிக்கோவில் இதுவரை கலந்து கொண்ட ஐந்து ஆட்டங்களிலும் அமோகமான வெற்றியைப் பெற்று முன்னணியில் திகழ்கிறார்கள். இவர்கள் இங்கு அடைந்த வெற்றிகளில் மிகவும் சிறப்புமிக்க வெற்றியெனக் கருதப்படுவது, இங்கிலாந்து கோஷ்டியின் வெற்றியாகும். பிரேஸில் இங்கிலாந்தை 1—0 கோல்களால் தோற்கடித்து, தாம் ஒரு பலம் கொண்ட கோஷ்டி என்பதை உலகறியச்செய்துவிட்டார்கள்.


பிரேஸில் கோஷ்டிக்கு, 'உலக உதைபந்தாட்ட மன்னன்' என்று வர்ணிக்கப்படும் வீரர் பீலி தலைமை தாங்குகின்றார்.

பிரேஸில் கோஷ்டி, பலம் கொண்ட கோஷ்டிகளான பேரு, இங்கிலாந்து, றூமேனியா, உறுகே ஆகிய கோஷ்டிகளை வென்றிகண்டு.



பயிர்த் தொழிலின் அதிசய கண்டுபிடிப்பு....

# 'அல்கதீன்' குழாய்



பிற உற்பத்திப் பொருள்களும் இப்பணிகளையெல்லாம் செய்தல் கூடும். ஆனால், அல்கதீன் கூடுதலாகச் செய்வது என்ன? பயிர்த் தொழிலில் எல்லா வகையிலும் முன்னேற்ற வழியில் முன் நிற்பதுதான்.

நீர்பாய்ச்சும் பொறியியலாளர், பயிர்த் தொழிலாளர், தோட்ட முதலாளிகள், கொள்வனவு செய்யும் முகவர்கள் ஆகிய எல்லோருமே குறைகள் உண்டா எனக் கூர்ந்து அவதானிப்பவர்கள். அவர்கள் யாவருமே இன்று கிடைக்கும் குழாய்களுள் மிகச் சிறந்தவை என ஒரே முகமாக நீர் பாய்ச்சும் பணிகளுக்கெனத் தேர்ந்தெடுத்திருப்பது அல்கதீன் குழாய்களே. நீளம், குறைந்த எடை, இலகுவான இணைப்பு முறை, மலிவு, இடமாற்றத்துக்கு எளிமை..................... அத்துடன் எளிதில் நொறுங்காத்தன்மை ஆகிய இவைதான் காரணங்கள்.

'அல்கதீன்' - குழாய்களுள்ளே முதன்மையானது.

CIC கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிற்றெட்.
தபால் பெட்டி 352 - கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்சர்வேடிவ் வெற்றி: தெ. ஆபிரிக்கா மகிழ்ச்சி
# காமன்வெல்த் நாடுகளில் கவலை

லண்டன் ஜுன்,02

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெற்று பதவிக்கு வந்திருப்பது உலகின் பலபாகங்களிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

## தென். கிழக்காஸியாவில் வரவேற்பு

கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றி தென்கிழக்காசியாவில் பொதுவாக வரவேற்கப் பட்டுள்ளது. தென்கிழக்காசியாவிலுள்ள பிரிட்டிஷ்ராணுவத்தை தொடர்ந்து அங்கேயே வைத்திருப்பதாக கன்சர்வேடிவ்கட்சி அறிவித்திருப்பதே இதற்குக் காரணம்.

கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றியை வரவேற்கும் இன்னொரு நாடு தென்னாபிரிக்காவாகும். பிரிட்டனுடனான தொடர்புகளை மேலும் பலப்படுத்திக் கொள்ளமுடியும் என்று தென்னாபிரிக்கா கருதுகின்றது.

கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றிகுறித்து காமன்வெல்த் நாடுகள் பொதுவாகக் கவலைகொண்டிருக்கின்றன. ஆசிய காமன்வெல்த் நாட்டுப் பிரஜைகள் பிரிட்டனில் குடியேறுவதை கன்சர்வேடிவ் அரசாங்கம் விரும்பமாட்டாது என்பதுவே இதற்குக் காரணம்.

## மந்திரிசபை அமைக்க ஹீத்துக்கு மகாராணி அழைப்பு

பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி அமோக வெற்றிபெற்றுவிட்டதால் புதிதாக மந்திரிசபை ஒன்றை அமைக்கும்படி கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் எட்வர்ட் ஹித், எலிசபெத் மகாராணியாரால் பணிக்கப்பட்டிருக்கின்றார்.

தமது மந்திரிசபைபற்றி அறிவிப்பதற்கு முன்பதாக திரு. ஹீத். கட்சியின் முதிய தலைவர்களுடன் ஆலோசனைகளை ஆரம்பித்தார்.

### மக்கள் சேவையே முக்கியம்

வெற்றிகிட்டிய பின் லண்டன் டௌனிங் தெருவிலுள்ள 10-வது இலக்க பிரதம மந்திரியின் வாசஸ்தலத்துக்குமுன் கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் புதிய பிரதமர் திரு எட்வேர்ட் ஹீத் பேசினார். வேறுபாடுகள் எதுவுமின்றி எல்லா மக்களுக்கும் சேவை செய்வதையே தமது அரசு முக்கியமாகக் கருதும் என்று திரு ஹீத் கூறினார். தமது பணிகளை முறையாகச் செய்வதற்கு எல்லா தரப்பு மக்களதும் ஒத்துழைப்பும் தமக்குத் தேவையென்று திரு

சத்தில் குறைவாகவிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

பிரிட்டனை ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேர்த்துக்கொள்வதற்கு இப்பொழுது அதிக சாத்தியக் கூறுகள் ஏற்படக்கூடும் என்று பிரான்சிலும் இத்தாலியிலும் கருதப்படுகின்றதாம்.

### ஆச்சரியம்

பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியே வெற்றி பெறக் கூடும் என்று எதிர் பார்க்கப்பட்டது. தேர்தலுக்கு முந்தியமக்கள் கருத்துக் கணிப்புகள்யாவும் தொழிற்கட்சிக்கே வெற்றி கிட்டும் என்று தெரிவித்தன. ஆனால் தேர்தல் முடிவுகள் உலகெங்கும் ஆச்சரியத்தை விளைவித்துள்ளன.

காமன்வெல்த் நாடுகளை பொறுத்தவரையில் இந்த முறைகள் ஆச்சரியத்தை மட்டுமல்ல கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

காமன் வெல்த் பிரஜைகள் பிரிட்டனில் தொழில்களில் அமர்வதற்கும் குடியேறுவதற்கும் கன்சர்வேடில்கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. பிரிட்டிஷ் பாஸ்போர்ட்வைத்திருக்கும் ஆசியாக்காரர்களுக்குஇடைஞ்சல்கள் ஏற்படலாம் என்று

புதிதாகக் குடியரசாக விரும்பும் இலங்கைபோன்ற நாடுகள் விஷயத்தில் கன்சர்வேடிவ் அரசின்போக்கு அவ்வளவு திருப்திகரமாக இருக்காது என்றும் கருதப் படுகின்றது.

### பங்கு மார்க்கட்

கன்சர்வேடிவ்கட்சி வெற்றி பெற்ற செய்தி பரவ ஆரம்பித்தவுடன் லண்டன் பங்கு மார்க்கட்டுகளில் பங்குகளில் விலை பெருவாரியாக அதிகரித்து விட்டன. ஸ்டர்லிங் பவுண்விலையும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

### போட்டி போட்டவர்கள்

பிரிட்டனில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் இம்முறை 630 இடங்களுக்கு 1798 அபேட்சகர்கள் போட்டியிட்டார்கள்.

தொழிற்கட்சி 617 ஸ்தானங்களுக்கும் கன்சர்வேடிவ் கட்சி 628 இடங்களுக்கும் லிபரல்கட்சி 333 இடங்களுக்கும் கம்யூனிஸ்ட்டுகள் 58 இடங்களுக்கும் ஸ்கொட்லாந்து தேசியவாதிகள்கட்சி 64 ஸ்தானங்களுக்கும் சிம்ரு

## கிரி நாடு திரும்பினார்

புதுடில்லி, ஜுன் 20

சுவிட்சர்லாந்து பின்லாந்து, போலந்து ஆகிய நாடுகளில் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு இன்று அதிகாலையில் இந்திய அதிபர் திரு. வி. வி. கிரி புதுடில்லி வந்துசேர்ந்தார். உப ராஷ்டிரபதியும் ராஜதந்திரிகளும் இதர பிரதானிகளும் அவரை வரவேற்றனர்

## 2-ம் தர அதிபராக பதவி உயர்வு

புதுக்குடியிருப்பு, சனி

முல்லைத்தீவைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் அதிபரான திரு. கு. வி. செல்வத்துரை இரண்டாந்தர அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இவர் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தின் அதிபராக 10 ஆண்டுகள் பணியாற்றியவர்.

திரு. செல்வத்துரை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திற்கு அதிபராக வந்தபின் கல்வித்துறையில் இவ்வித்தியாலயம் பெரிதும் முன்னேற்றமடைந்தது, சமய சமூகப்பணியிலும் இவர் மிக்க ஈடுபாடுடையவர்.

## ஊரதீவு மக்கள் மகஜர்

ஊரதீவு, வெள்ளி

தீவுப்பகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்துக்கு ஒருமகஜர் ஒன்று ஊரதீவு மக்களின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பின்வரும் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு அதில் கோரப்பட்டுள்ளது.

ஊரதீவு-சங்குமாலடி வீதியை பொதுமராமத்து இலாகாவிடம் கொடுத்து செப்பனிடுதல்.

ஊரதீவு உபதபாற்கந்தோரை "ஏ" தரத்திற்கு உயர்த்தி தொலைபேசி வசதி செய்தல்.

ஊரதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலையை மகாவித்தியாலமாகத் தரமுயர்த்தல்

சோழகனோடை கள்ளியாறு பாதைகள் கடலால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்புகொண்டு திருத்த ஆவன செய்தல். ஊரதீவுப் பகுதியில் 'பெற்றோல்' கண்டுபிடிக்கப்பட்டு வழங்கப்படும் வேலைவாய்ப்புகளின் போது ஊரதீவு மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இவை பற்றித்தான் ஆவன செய்வதாக பண்டிதர் இரத்தினம் உறுதியளித்துள்ளார்.

## சோவியத் கருத்துக்களும் ஒரே விதமானவையாம்

### யுதாண்ட் கூறுகிறார்

மாஸ்கோ, ஜுன் 20

மேற்கு ஆசியாவிலும், இந்தோசீனாவிலும் நடைபெறும் சண்டைகள் குறித்துத் தாம் கொண்டிருக்கும் கருத்துக்களும், சோவியத் தலைவர்கள் கொண்டிருக்

னில் சோவியத் தலைவர்கள் அளித்த விருந்துவைபவத்தில் யுதாண்ட் பேசினார் இந்தோசீனாவில் நடைபெறும் யுத்தம் படுமோசமானதாகும் என்று குறிப்பிட்ட இவர், அரசியல் தீர்வு

## இந்திய இசைகள் பற்றி சோவியத் நிபுணர்கள்

புதுடில்லி, ஜுன் 20

தென்னிந்திய கர்நாடக இசைகளைத் தாம் வெகுவாக அனுபவித்து ரசித்ததாக சோவியத் இசையமைப்பாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

திபிலிசியைச் சேர்ந்த திரு ஆதர் கார்தேவியும், பாகுவைச் சேர்ந்த திரு மிர்ஜா-ஜாதே கய்யாமும், சென்னை, பெங்களூர், பம்பாய், கல்கத்தா, லக்னோ ஆக்ரா ஆகிய நகரங்களில் 21 நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டனர்,

இந்திய இசைகள் பற்றி பிரபல அஸர்பைஜான் இசையமைப்பாளர் திரு. கையாம் கூறியதாவது: 'பல்வேறு தனித்தன்மைகளுடன் கூடிய இந்திய நகரங்களும் இந்திய மக்களும் என்னை மிகவும்கவர்ந்தனர். தொன்மையான பலவித கலாசாரங்களைத் தழுவி நிற்கும் இந்தக் கலாசாரங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைந்தேன் கர்நாடக இசைக்கும் வடஇந்திய இசைக்குமிடையேயுள்ள வேற்றுமையானது நுட்பங்கள் என்ற மேம்போக்கான விஷயங்கள் சம்பந்தப்பட்டதல்ல. அது மக்களின் உணர்ச்சிப் போக்குகள்சம்பந்தப்பட்ட விஷயமாகும்: நான் கர்நாடக இசை வடிவங்களையும் அனுபவித்தேன். இந்தியாவில் பல்வேறு பிரதேசங்களின் கிராமிய கலை வடிவங்களையும் அனுபவித்தேன்.

திரு. கார்தேவி 'எனக்குப் பெங்களூர் மிகவும் பிடித்திருந்தது. கல்கத்தாவில் ரவீந்திர சங்கீதத்தை நிரம்பக் கேட்டேன்; அதுவும் என் உள்ளத்தைக் கவர்ந்தது; மக்களின் வாழ்வில் வேரூன்றியுள்ள கலைப் படைப்புக்கள் மிகுந்த ஆழமும் கவர்ச்சியும் கொண்டவையாகும். எல்லா நாடுகளின் கிராமியக் கலைகளையும் நான் விரும்புகிறேன் என்று கூறினார்.

## 'செக். உதவியுடன் வடக்கில் கண்ணாடித் தொழிற்சாலை நிறுவுக'

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை சமசமாஜக் கட்சி கிளை வாலிப முன்னணியின் 19-வது ஆண்டு கூட்டம் திரு எஸ். பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. கூட்டு முன்னணி அரசாங்கத்தின் வரலாறு பற்றி திரு எஸ்.ரி. சிவராசா கூட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு விபரமாக எடுத்துக் கூறினார். பின்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு சமசமாஜ கட்சித் தலைமைப் பீடத்திற்கும் ஒரு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

0 வல்லிபுரக் கோயிலையடுத்து கண்ணாடித் தொழிற்சாலையை செக்கோசிலவாகியா உதவியுடன் நிறுவுதல்,

0 பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம், பனம்பொருள் கூட்டுத்தாபனம் நிறுவுதல்

0 தொண்டமானாறு ஓடையை ஒரு வசதியான மீன்பிடித் துறைமுகமாக அமைத்தல் மீனவர்களுக்கு உதவுதல்

0 வேலையற்றோருக்குவேலை வாய்ப்பு.

0 வல்வெட்டித்துறையில் சி. டபிள்யூ. ஈ, மக்கள் வங்கி திறத்தல்.

0 வருகிற ஆவணி மாதத்தில் திரு. தர்மகுலசிங்கத்தின் நினைவு தினத்தை வெகு விமரிசையாகக் வல்வையில் நடாத்துதல்.

## நிதிமந்திரிக்கு ஆசிரியர் சங்கத் தலைவர் வாழ்த்து

யாழ்ப்பணம். ஞாயிறு

கூட்டணி அரசாங்கத்தின் நிதிமந்திரி திரு. என், எம், பெரேராவுக்கு தீவுப் பகுதித் தமிழாசிரிய சங்கத் தலைவரும் 1960-ல் நடைபெற்ற ஆட்சிமன்றத் தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் சமசமாஜக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளருமாகிய பண்டிதர் வி. வ. நல்லதம்பி பின்வரும் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

'சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மிகுந்த நேசமனப் பான்மையுடன் இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன் வாழ்ந்ததைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். இன்று சில வருடங்களாக அவ்வொருமைப்பாட்டில் அரசியல்வாதிகள் சிலரால் சிறுபிளவுகள் உண்டானதும் தாங்கள் அறிந்ததே. சிறுபான்மை மக்களாகிய தமிழினம் அச்சமும் பீதியும் கொண்டிருந்த இந்த வேளையில் கூட்டணியினர் மூன்றில் இரண்டு பங்கு பலத்துடன் அரசாங்கம் அமைக்கும் சந்தர்ப்பம் இறைவனால் இரு இனமக்களும் மீண்டும் நேசமனப் பான்மையுடன் வாழ வழி வகுத்த ஒரு அரிய சந்தர்ப்பமாகும். தங்களதும் தங்கள் பிரதமரதும் மந்திரி சபையினதும் ஏனைய உறுப்பினர்களதும் மதிநுட்பமும் செயலாற்றும் திறமையும் பரந்த உள்ளமும் தேசிய ஐக்கியத்தை உருவாக்கி நாட்டைச் சுபீட்சப்பாதையில் கொண்டு செல்ல வழி வகுக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகவே கூட்டணி அரசாங்கத்தின் ஆட்சி சிறப்பாகப் பல்லாண்டு நடக்க வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களுக்கும் சேவை செய்வதையே தமது அரசு முக்கியமாகக் கருதும் என்று திரு ஹீத் கூறினுர். தமது பணிகளை முறையாகச் செய்வதற்கு எல்லா தரப்பு மக்களதும் ஒத்துழைப்பும் தமக்குத் தேவையென்று திரு ஹீத் கூறினுர். மக்களைப் பிரிப்பதல்ல ஒன்றுபடுத்துவதுதான் எமது கொள்கை என்ருர் அவர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்யவேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

## 53 வயதுப் பிரமச்சாரி

திரு. எட்வார்ட் ஹீத்துக்கு 53 வயதாகின்றது அவர் திருமணமாகாத பிரமச்சாரி. கென்ட் மாகாணத்தில் மத்தியதரக் குடும்பத்தில் பிறந்த அவர் 'ஒக்ஸ்போர்ட்' சர்வகலாசாலையில் சங்கீதத்துக்கான உபகாரச் சம்பளம் பெற்ருர். 1964-ம் ஆண்டு ஹியூம் பிரபுவுக்குப் பதிலாக அவர் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரானுர்.

பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சிவெற்றிபெற்று பதவிக்குவந்திருப்பது தென்னுபிரிக்காவுக்கு மகிழ்ச்சியளித்துள்ளது. தொழிற் கட்சி அரசாங்கம் தென்னுபிரிக்க நிறத்துவேஷம் அரசாங்கத்திடம் காட்டிவந்த மனப்பேரக்கை புதிய அரசு மாற்றிக் கொள்ளக்கூடும் என்றும், இருநாடுகளுக்குமிடையில் நெருங்கிய உறவுகள் ஏற்படும் என்றும் தென்னுபிரிக்கா கருதக்கூடும் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

ரொடீஷியாவிலும் கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றி குறித்து மகிழ்ச்சி நிலவுவதாகத் தெரிகின்றது.

தென்கிழக் காசியாவிலும் கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றி வரவேற்கப்படுகின்றது. இப்பகுதியிலுள்ளபிரிட்டிஷ் ராணுவத்தை தொழில்கட்சி வாபஸ்பெற்றுக்கொள்வதற்கு முடிவு செய்திருக்கிறது. ஆனுல் கன்சர்வேடிவ் கட்சி பிரிட்டிஷ் ராணுவத்தை அங்கேயே வைத்திருக்கப்போவதாக அறிவித்திருக்கின்றது.

கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றி குறித்து சிங்கப்பூரில் திருப்தி நிலவுவதாக அங்கிருந்து நிருபர்கள் அறிவிக்கிருர்கள் பிரிட்டிஷ் ராணுவம் அப்பகுதியில் இருப்பதின்காரணமாக சிங்கப்பூர் பொருளாதார ரீதியில் பெரும்பயன் அடைந்துவருகின்றது. பிரிட்டிஷ் ராணுவம் இருப்பதினுல் கம்யூனிஸ்ட் அபாயம் இப்பிரதே

யேறுவதற்கும் கன்சர்வேடிவ்கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. பிரிட்டிஷ் பாஸ்போர்ட்வைத்திருக்கும் ஆசியாக்காரர்களுக்குஇடைஞ்சல்கள்ஏற்படலாம் என்று தோன்றுகின்றது.

கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றி பாகிஸ்தானில் அவ்வளவாக வரவேற்கப்படவில்லை

காமன்வெல்த் பிரஜைகள் பிரச்னைபற்றி இந்தியாபுதிய பிரிட்டிஷ் அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும்என புதுடில்லியில் ஓர் அதிகாரி கூறினுர்.

தென்னுபிரிக்கா பற்றிய தனது கொள்கையை புதிய பிரிட்டிஷ் அரசாங்கம்தெளிவுப்படுத்த வேண்டுமென்று சாம்பியா நாட்டு அதிபர் கவுண்டா கூறியிருக்கிருர்

பொதுத்தேர்தலின்போது காமன்வெல்த் பிரஜைகள் பிரிட்டனில் குடியேறுவது சம்பந்தமாக சர்ச்சைக்குரிய பிரச்னைகளைக் கிளப்பிவிட்ட இனுேக் பாவங் என்பவர் இரட்டிப்பு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றிருப்பதும், அவரது பிரசாரங்கள் கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றிக்குமுக்கிய காரணங்களில் ஒன்ருகக்கருதப்படுவதும், ஆசிய, காமன் வெல்த் நாடுகளில் ஏற்பட்டுள்ள கவலைக்கு அடிப்படைக் காரணமாகும்.

தொழிற்கட்சி 617 ஸ்தானங்களுக்கும் கன்சர்வேடிவ் கட்சி 628 இடங்களுக்கும் லிபரல்கட்சி 333 இடங்களுக்கும் கம்யூனிஸ்ட்டுகள் 58 இடங்களுககும் ஸ்கொட்லாந்து தேசியவாதிகள்கட்சி 64 ஸ்தானங்களுக்கும் சிம்ரு கட்சி 36 இடங்களுக்கும் மற்றவர்கள் 56 இடங்களுக்கும் போட்டியிட்டன. 197 தொகுதிகளில் தொழிற் கட்சியும் கன்சர்வேடிவ் கட்சியும் நேரடியாக மோதிக் கொண்டன.

## கட்சிகளின் நிலை

தேர்தல் முடிவுகளின்படி இறுதிநிலைவரம் பின்வருமாறு.-

| | |
|---|---|
| கன்சர் வேடிவ் கட்சி | 330 |
| தொழிற்கட்சி | 288 |
| லிபரல் | 6 |
| மற்றவர்கள் | 6 |

கன்சர்வேடிவ் கட்சிக்கு30 ஸ்தானங்கள் அதிகப்படியாகவிருக்கின்றன. லிபரல் கட்சிக்கு பெரும்தோல்வி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆட்சிமன்றத்தில் 13 ஸ்தானங்களைக் கொண்டிருந்த இக்கட்சி இம்முறை 7 ஸ்தானங்களைக் கோட்டைவிட்டு 6 ஸ்தானங்களை மட்டும் ஜெயித்துள்ளது.

## 'உ. சுகாதார நிறுவனத்தின் பிரதான பொறுப்பு'

ஜெனீவா, ஜூன் 20

'உலக சுகாதாரத்தைப் பேணுவதோடு தனிப்பட்ட குடும்பங்களின் ஆரோக்கிய நலனைக் காப்பதும் உலக சுகாதார நிறுவனத்தின் பிரதம பொறுப்பாகும் என்று உலக சுகாதார நிறுவனத்தில் பொதுப் பணியாளரான டாக்டர் எம். ஜி. கண்டோவ் ஜெனிவாவில் நடைபேற்ற உலக சுகாதார அசெம்பிளியில் உரைநிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

டாக்டர் கண்டோவ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. 'குடும்ப நலனை பாதுகாப்பதில்மனித இனப்பெருக்கம், குடும்பத் திட்டம் ஆகிய இரண்டையும் நாம் முக்கிய அம்சங்களாகக் கருதுகிருேம். தாய், சேய் உடல்நலத்தைப் பேணுவதிலும் தனிப்பட்ட குடும்பங்களின் மகிழ்ச்சியைக் காப்பதிலும் எவ்வளவுதூரம் உதவுகிறதுஎன்பதிலேயே குடும்பத்திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது.

### தபாலமைச்சருக்கு வாழ்த்து

மூளாய், சனி

மூளாய்க் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லையா குமாரசூரியர் தபால் தந்தி அமைச்சராக நியமிக்கப்பட்டதையிட்டு, மூளாய் சனசமூக நிலையத் தலைவரும், மூளாய் கிராமசமை அங்கத்தவருமான திரு. க, குமாரசாமியினுல் மேற்படி நிலையச் சார்பில் பாராட்டுத் தெரிவித்து வாழ்த்துச் செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

### மொரட்டுவையில் மக்கள் குழு

மொரட்டுவை, சனி.

மொரட்டுவைத் தொகுதி ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. விமலசிறி டீ. என் தனது தொகுதியில் உள்ள எல்லாக் கட்சி அங்கத்தவர்களையும் கொண்ட ஒரு மக்கள் கமிட்டியை நிறுவியுள்ளார். ஆட்சிமன்ற அங்கத்தவருக்கு இம் மக்கள் கமிட்டி மக்களது பிரச்சினைகள் பற்றி எடுத்துக்கூறும்.

## யு...ண்ட் கூறுகிருர்

மாஸ்கோ, ஜூன் 20

மேற்கு ஆசியாவிலும், இந்தோசீனுவிலும் நடைபெறும் சண்டைகள் குறித்துத் தாம் கொ...டிருக்கும் கருத்துக்களும், சோவியத் தலைவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களும் ஒரே விதமாக இருப்பதாக ஐ.நா பொதுச்செயலாளர் யுதாண்ட் கூறினுர்.

இந்தோசீன நிலைமை பற்றியும், மேற்கு ஆசிய நெருக்கடிகள் பற்றியும் சோவியத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக யுதாண்ட் மாஸ்கோ வந்திருக்கிருர். கிரெம்ளினில் சோவியத் தலைவர்கள் அளித்த விருந்துவைபவத்தில் யுதாண்ட் பேசினுர் இந்தோசீனுவில் நடைபெறும் யுத்தம் படுமோசமானதாகும் என்று குறிப்பிட்ட இவர், அரசியல் தீர்வு ஒன்றே அங்கு ஏற்படவேண்டும் என்ருர்.

இந்தோசீனு சம்பந்தமாக சர்வதேச மாநாடொன்று நடைபெறவேண்டும் என்று யுதாண்ட் முன்னர் தெரிவித்திருந்தார். இதுசம்பந்தமாகவே அவர் சோவியத் தலைவர்களுடன் பேசவிருக்கிருர் என்று கருதப்படுகிறது.

## தோட்டத் தொழிலாளருக்கு விரைவில் ஆறுநாள் வேலை

கொழும்பு, சனி

தோட்டத் தொழிலாளருக்கு ஆறு நாட்கள் வேலை கொடுக்கும்படிதோட்டநிர்வாகிகளை நிர்ப்பந்திக்கும் வகையில் விரைவில் தொழில் அமைச்சர் திரு. எம். பி. டி. இஸட்சிறிவர்தன நட்வடிக்கைகள் எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகமார்க்கட்டில் தேயிலைக்கு ஏற்பட்டுள்ள விலைவீழ்ச்சிகளின் காரணமாக தோட்டத் தொழிலாளகளுக்குஆறுநாள் வேலைகொடுப்பது கட்டுப்படியாகாதென்று தோட்ட நிர்வாகள் வேலை நாட்களைக் குறைத்துவருகின்றனர்.

இதுசம்பந்தமாக அண்மையில் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன்தூதுகோஷ்டியொன்றுதோட்டத் தொழில்அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர்டி. சில்வாவிடம் எடுத்துக் கூறிய பொழுது இந்தவிஷயம் தொழில் அமைச்சின் கீழ் இருப்பதால் அவருடன்தொடர்புகொள்ளும் படி டாக்டர். சில்வா அவர்களைக் கேட்டுக்கொண்டார். (சி.பி.ஏ.)

### சாந்திக மஹோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். வண் கிழக்கு, கந்தர்மடம் சித்திவிநாயகர் கோவில் சாந்தீக மஹோற்சவம் இம்மாதம் 22-ம் திகதி தொடங்கி அடுத்த மாதம் 3-ம் திகதி முடிவடையும். உற்சவகாலத்தில் தினமும் இரவு 7 மணியிலிருந்து கான கதாவாரிதி சிவ. வை. நித்தியானந்த சர்மா "கந்தன் கருணை' என்னும் தொடரில் கந்தபுராண கதாகாலட்சேபம் செய்வார்.

### எம். பி. ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உரும்பிராய் சிவன் வீதியிலிருந்து கரந்தனுக்குச் சிரமதான முறையில் ஒழுங்கை அமைக்கும் வேலைகளை கோபபாய் எம். பி திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார்.

உரும்பிராய் 3-ம்வட்டார அங்கத்தவர் திரு குலசேகரம் உரும்பிராய் சனசமூக நிலையத் தலைவர் ஆகியோர் இளைஞர்களைத் திரட்டி இந்த ஒழுங்கை அமைக்கும்வேலையைச் செய்தனர். உரும்பிராய் கி. ச. அங்கத்தவர் திரு. நடேசலிங்கமும் பங்கு பற்றினுர். தொடர்ந்து சிரமதான முறையில் ஒழுங்கையை அமைக்கத் தீர்மானித்துள்ளனர். (கு.வி ம.)

### கிராம சீர்திருத்த சங்கத்தின் தீர்மானம்

வேலணை சனி

வேலணை கிராம சீர்திருத்தச் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது சங்கத்தின் புதிய தலைவராக திரு. க. தம்பாபிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வேலணை வங்களாவடியிலிருந்து மண்கும்பான் வரை செல்லும் வீதியைத் திருத்தும்படி பொது வேலைப் பகுதியைக் கோருவதெனவும், ஒரு சிறுவர் பாடசாலை நடத்துவதெனவும், வேலணை அரசடி வைரவர் ஆலயத்தின் நிர்வாகத்தைச் சங்கம் பொறுப்பேற்பதெனவும், தீர்மானிக்கப்பட்டது.

...டத்தி... நிறைவேற்றப்பட்டு சமசமாஜ கட்சித் தலைமைப் பீடத்திற்கும் ஒரு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

0 ...லிபுரக் கோயிலையடுத்து கண்ணுடித் தொழிற்சாலை... டபிள்யூ. ஈ. மக்கள் வங்கி திறத்தல்.

0 வருகிற ஆவணி மாதத்தில் திரு. தர்மகுலசிங்கத்தின் நினைவு தினத்தை வெகு விமரிசையாகக் வல்வையில் நடாத்துதல்.

## "நாட்டிற்கு ஏற்றவகையில் கல்வி முறைமாறவேண்டும்'

பருத்தித்துறை, சனி

'இலங்கை சுதந்திரமடைந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாகியும் ஆங்கிலேய ஆட்சியாளர் விட்டுச்சென்ற அதே கல்வியமைப்பு முறை அதிக மாறுதலின்றித் தொடர்ந்து நிலவிவருவது வருந்தத்தக்கது. இன்று பலதரப்பட்ட தேவைகள் நாட்டை எதிர்நோக்கியிருக்கும் போது கல்வி முறையும் மாறவேண்டும். பொருளாதார, தொழில் நுட்பத் துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டால் மட்டுமே இன்றைய நெருக்கடியைச் சமாளிக்க முடியும்'

இவ்வாறு வதிரி திரு. இருதயக்கல்லூரி அதிபர் திரு. தொமஸ் ஈப்பென் நேற்று முன் தினம் நடைபெற்ற கல்லூரித் தினவிழாவை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகயில், தொழில் முறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல்வேண்டும் என்றும் ஒவ்வொரு மாகாணத்திலும் பூரணத்துவம் பெற்ற தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டுமென்றும் கூறினுர்

கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன

## கல்வி அமைச்சருக்கு மகஜர் சமர்ப்பிப்பார்

மாவிட்டபுரம், சனி

ஆசிரியரிடையே அண்மையில் செய்யப்பட்ட பதவி உயர்வு நியமனங்கள், ஆசிரியர்களுக்கு சேவை மூப்புப் பட்டியல், கல்வி சேவைக் கமிஷன், ஆசிரியர்களுக்கு ஓர் தனிப்பட்ட சம்பள நிர்ணயகமிஷன் போன்ற ஆசிரியர்களது முக்கியபிரச்னைகளைக் கொண்ட மகஜர் ஒன்றைக் கல்வி அமைச்சருக்குச் சமர்ப்பிப்பதென்று தேசிய ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

சங்க காரியாலயத்தில் நடந்த இக்கூட்டத்தில் நிறைவேறியமற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

''ஆசிரியர் பிரச்னை சம்பந்தமாக இம்மாத முடிவில் கல்வியமைச்சரைப் பேட்டி காண்பது''.

''கடந்த சில ஆண்டுகளைப் போலல்லாது இப்போது எமது அரசாங்கம் ஆசிரியர் சங்கங்களை அங்கீகரிக்கவும் அவற்றுக்கு செவி சாய்க்கவும் தயாராக உள்ளதால் ஆசிரிய தொழிற் சங்கங்கள் கூடிய பொறுப்புணர்ச்சியுடனும், ஒற்றுமையாகவும் கடமையாற்ற வேண்டும். இதற்கு அகில இலங்கை ஆசிரியர் சங்க சம்மேளனத்தை வலுப்படுத்தி அதன் அங்கத்துவ சங்கங்கப் பரஸ்பரம் பொதுப் பிரச்னைகளில் ஒன்றுபட்டு செயல்படவேண்டிய அவசியத்தை சங்கம் உணர்கிறது. இதற்கு தற்போது முட்டுக்கட்டையாகஉள்ள ஆசிரியர் இட மாற்றம் சம்பந்தமாக ஒரு பொதுத் திட்டத்தைஅடுத்த ஆசிரியர் சங்கசம்மேளனக் கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

''நீண்டகாலம் சங்கத்தின் அங்கத்தவராகவும் தலைவராகவும் இருந்த திரு. அ. வைத்திலிங்கம் சேவையிலிருந்து இளைப்பாறியமையால் சங்கத்துக்கும் ஆசிரியர் உலகத்துக்கும் அவர் செய்த சேவையைப்பாராட்டுதல். அகில இலங்கை ஆசிரியர் சங்கசம்மேளனத்தை உருவாக்கிப் பேணுவதற்கு அவர் செய்த தொண்டினை நாம் மறக்கமுடியாது''.

### ஒருநாள் சம்பளம் வழங்கினர்

சுழிபுரம், சனி

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கடமையாற்றும் நூற்றுக்கு மேலான ஊழியர்கள் நாட்டைக் காக்கும் நிதிக்கு தமது ஒரு நாள் சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளனர்.

சந்தேகமும் இல்லை. ஆகவே கூட்டணி அரசாங்கத்தின் ஆட்சி சிறப்பாகப் பல்லாண்டு நடக்க வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.'

### மாணவர் குறை நீங்கியது

மாவிட்டபுரம், ஞாயிறு

ஆங்கில பாடம் படிக்க முடியாது கஷ்டப்பட்ட மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட பெற்ருேரின் புகாரையடுத்து தொகுதி எம். பி. திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் இதுசம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும், மாரீசன்கூடல் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்கவும் திரு. செல்வநாயகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

### "மருத்துவ மனை வேண்டும்"

சுழிபுரம், சனி

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையுடன் இணைந்த ஒரு மருத்துவ மனையை அமைத்துத் தரும்படி பொதுமக்கள் சார்பில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியிடமும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற மக்கள் சுகாதார வார விழாவில் இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### சைக்கிள் மறைந்தது

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுசமாஜத்தில் பணியாற்றும் திரு. என். துரைசிங்கம் என்பவர்தமது சைக்கிளை வழக்கம்பறை அம்மன் கோவில் தேர்திருவிழா அன்று பறிகொடுத்தார். கோவில் முன்புள்ள கடைக்கு அருகாமையில் சைக்கிளை நிறுத்தி விட்டு கோவிலுள்சென்று தரிசித்துவிட்டு வெளியே வந்தபோது சைக்கிள் மாயமாய் மறைந்ததைக் கண்டார். சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுளை நினைப்பதன் மூலமே மனச்சுத்தம் ஏற்படும். நினைப்பால், கடவுள் உணர்ச்சி அதிகரித்து, மனம் வரவர தூய்மையாகவும், அவரது ஒளியும், சக்தியும், மகிமையும் நமக்குத் தெரியவும் செய்யும் —சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 7-ந் திகதி (21-6-70)


## மீண்டும் இராணுவத்தாக்குதல்

மன்னாரில் மீண்டும் இராணுவத்தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது வங்காலை என்ற கிராமத்தில் சில வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. பலர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வங்காலைக் கிராம மக்கள் மட்டுமல்லாமல் மன்னார்ப் பகுதி மக்களே பீதியடைந்துள்ளனர். தாங்கள் பிறந்து வளர்ந்த இடத்திலே இனியும் நிம்மதியாக வாழமுடியுமா? என்று அச்சமடைந்துள்ளனர்.

சென்ற வியாழக்கிழமை இரவு வங்காலைக் கிராமத்தில் இராணுவச் சிப்பாய்கள் நடத்திய அட்டகாசத்தின் பின் அங்கு சென்று நிலைமையை ஆராய்ந்த இராணுவ பொலிஸ் அதிகாரிகளும் அரசாங்க அதிபரும் அப்பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்குப்பாதுகாப்பளிப்பதாகவும் உறுதி கூறியிருக்கின்றனர். சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று நிலைமையை ஆராய்ந்ததுடன் அப்பகுதி மக்களுக்கு ஆறுதல்கூறி அபயமளிக்கமுன்வந்த அதிகாரிகள் பாராட்டுக்குரியவர்கள் தான். ஆனாலும் மக்கள் ஆறுதலடைவார்களா? அச்சமின்றித் தங்கள் தொழிலுக்குச் செல்லமுடியுமா?

சென்ற வியாழக்கிழமை நடந்த இராணுவத்தாக்குதல் சம்பவம்தான் இங்கு நடந்த முதல் சம்பவமல்ல. சில மாதங்களுக்கு முன்னர் தான் தாழ்வுபாடு கிராமத்தில் மோசமான சம்பவங்கள் நிகழ்ந்தன, மன்னார், தலைமன்னார்ப் பகுதியில் இராணுவத்தாக்குதல் சம்பவங்கள் பலதடவைகள் நிகழ்ந்துள்ளன. மன்னார்ப் பகுதியில் மட்டுமல்ல வடபகுதியில் இராணுவத்தாக்குதல் சம்பவங்கள் நடைபெறுவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

தள்ளாடி இராணுவமுகாமைச்சேர்ந்த சில இராணுவச் சிப்பாய்கள் முகாம் அதிகாரி பொலிசாரின் உதவியை நாடமுடியாதபடி திட்டமிட்ட வகையால் தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. இரவில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. தாக்குதல் நடத்தியவர்கள் சாதாரண உடையில் சென்றிருக்கின்றனர். அவர்களை அடையாளம் காண்பது சுலபமல்ல. எனவே தாக்குதல் நடத்தியவர்கள் சுலபமாகத் தப்பிவிடலாம்.

சில மாதங்களுக்கு முன்னர் தாழ்வுபாடு கிராமத்தில் நடந்த சம்பவங்களுக்குப் பின்னர் அந்த முகாமிலிருந்த சிங்க அணிப் பிரிவினர் திருப்பி அழைக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக ஸி. எல். ஐ என்ற அணியினர் அனுப்பப்பட்டனர். இந்தப் புதிய அணியினர் இன்றுடன் கொழும்புக்குச் செல்லவிருக்கின்றனராம். அதற்குள் இப்படியொரு அட்டகாசமா? இனிவரும் இராணுவத்தினர் என்ன செய்வார்களோ?

சட்டவிரோதக் குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தடுப்பதற்காகத் தான் இங்கு இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டன. இப்படித் தான் அரசாங்கங்கள் விளக்கம் கூறின. இந்தக் கடமைகளைவிட சட்டவிரோதமான தாக்குதல் சம்பவங்களில் அவர்கள் ஈடுபட்டதே அதிகமென்று சொல்லலாம்.

சட்டவிரோதக் குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தடுப்பதற்கு இராணுவத்தினருக்கும் சரி பொலிசாருக்கும்சரி பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம், இவற்றைப் பெறுவதற்கு இராணுவம் தவறிவிட்டது. இராணுவ அணியினரை மாற்றுவதால் இப்பகுதி மக்கள் அச்சமின்றி வாழவும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினருக்குப் பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்குமென்றோ எதிர்பார்க்க முடியாது.

## வகுப்புவாதக் கட்சிகள் எவை?

'தமிழ்பேசும் மக்களின் முற்போக்கு முன்னணி' தலைவர் திரு. எம். துரைராசாவின் ஓர் அறிக்கையைப் படித்தேன். தமிழினத்திற்கு விமோசனம் அளிக்கதனது முன்னணியே ஏற்ற கட்சி என்றும் தமிழரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரசும் வகுப்புவாதக்கட்சிகள் என்றும்கூறியிருக்கிறார்.

1. தமிழரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரசும் வகுப்புவாதக்கட்சியானால் தமிழ்ப்பேசும் மக்கள் முன்னணி' வகுப்புவாதக் கட்சியில்லையா?

2. சிறுபான்மைமக்களின் பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படவில்லையென்பதை ஒத்துக்கொள்ளும் திரு. துரைராசா என்ன பிரச்னைகள் எப்படித் தீர்க்கப்படவேண்டும் என்பதைத்தன் அறிக்கையில்வெளியிடாததேனோ?

3. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வகுப்புவாதக்கட்சியல்லவென்று கூறும் இவர் இக்கட்சிமூலம் சிறுபான்மையோர் பிரச்னைகளை இதுவரை தீர்க்க ஏன் முயற்சி எடுக்கவில்லை?

4. தமிழ்ப்பிரதேசங்களில் பொதுசன ஊழியர்களாக தமிழ் தெரியாத பொலிஸ் டாக்ரர், மருத்துவமாதர் ஆதியோர் கடமையாற்றுவதை திரு. துரைராசாவும் அவர் சார்ந்தஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியும்ஏற்றுக்கொண்டுள்ளதா? இன்றேல் இந்நிலையை மாற்ற என்ன நடவடிக்கைகள் எடுக்கவிருக்கின்றனர்.

5. தமிழர் பிரதேசத்தில் தலைமைப் பதவிக்காக கட்சிகள் பல தோற்றுவிக்கப்படுகின்றனவேயன்றி தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க கட்சிகள் தோன்றவில்லையென்பதை தயவாக திரு. துரைராசா அவர்களுக்குத் தெரிவிக்கவிரும்புகிறேன்.

ச. சபாபதி
காரைநகர்.

## ஆட்சிமன்ற சிறுபான்மைப் பிரதிநிதிகள் கடமை

சிறுபான்மையினரின் சில பிரதிநிதிகள் அரசாங்கக்கட்சியிலும் மந்திரிசபையிலும் இடம்பெற்றிருப்பினும், இதில் குறிப்பிட்டஒரு சிறுபான்மையினம் அரசாங்கத்தின் சில சலுகைகளால் அரசாங்கத்தை முற்றாக ஆதரிப்பினும் மற்றொரு சிறுபான்மையினம் தாக்கப்படும்போது அந்நிலை தமக்கு ஏற்பட இடமுண்டு என்பதை மனதிற்கொண்டுசட்டபூர்வமாக எல்லா சிறுமை இனத்தவர்க்கும் பெரும்பான்மை மக்களைப்போன்று எல்லாத் துறைகளிலும் வாய்ப்புக்கள் ஏற்படுத்த முயலவேண்டும். எந்தச் சிறுபான்மை மக்களுக்கும் அநீதி விளைவிக்கப்படும்போது எல்லா சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளும் ஒன்றுசேர்ந்து நீதியீனத்தை எடுத்துக்காட்டி கவனிக்கப்படாதவிடத்து ஆட்சிமன்றத்தை விட்டு வெளியேறி தமது பதவிகளை ராஜினமாச் செய்ய ஆயத்தமாயிருப்பதுதான் நீதி.

அரசாங்கத்திலும் ஆட்சிமன்றத்திலும் இடம்பெறும் தமிழர், முஸ்லிம்கள் முதலான சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் தமது கொள்கைகளையோ கட்சிக்கொள்கைகளையோ மறந்து ஒன்றுசேர்ந்து ஆராயவேண்டிய பல முக்கிய விஷயங்கள் உண்டு. நம் குழந்தைகளின் கல்வி, இலங்கை குடியரசு அந்தஸ்து என்பன ஆட்சிமன்றத்தில் பரிசீலனை செய்யப்படும்போது இவ்வித ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது முக்கியகடமை.

இக்குறிக்கோளுக்காக சிறுபான்மை மக்களின் ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் மாதமிருமுறையாவது கொழும்பில் அல்லது வசதியான வேறு இடங்களில் சந்தித்து முக்கிய விஷயங்களை கலந்து பேசுவதற்கு குறிப்பிட்ட பிரதிநிதிகளில் ஒருவர் அல்லது இருவர் வாய்ப்பை ஏற்படுத்துவதுதான் மக்களின் தலையாய தொண்டாகும்.

மீசாலை அருட்குமார்.

## சிறிமாவோ அரசாங்கத்தில் சமய பாதுகாப்பு இருக்கும்

இலங்கை மக்களின் சமயங்களையும், கோயில்களையும், மக்களின் பக்தி மார்க்கத்தையும் சிறிமாவோ அரசாங்கம் பாதுகாத்துத் தருமென்பது எங்கள் பூரண

இலங்கை ஒரு பௌத்த நாடு. இலங்கையில் பௌத்த சமயம் மேலோங்கி வளருகின்றது. அகிம்சா, பரமோ தர்மத்தைக் கைக்கொண்டொழுகும் நாடும், புத்த

## முடிவை மாற்றுவது நல்லது

இலங்கை எந்த நாட்டிற்கும் அடிபணிய மாட்டாது; எப்பொழும் நடுநிலைமையில் நிற்கும்.. இப்படி இலங்கை அரசியல் கட்சிகளெல்லாம், பல தடவைகள் கூறியுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இப்படியேதான் கூறியது.

இஸ்ரேலுடனுன ராஜீயத் தொடர்பை முறித்துக் கொள்வது, நடு நிலைக் கொள்கைக்குஒத்து வருமா? இஸ்ரேல் அது பிடித்து வைத்திருக்கும் பகுதிகளை, மீண்டும் அரபுநாடுகளிடம் கொடுத்து விடுவது தான் முறை. இதை இலங்கை அரசாங்கம் வற்புறுத்துவதும் முறை தான் ஆனல் ராஜீயத் தொடர்பை முறித்துவிட்டால், இஸ்ரேல் அரசை எப்படி வற்புறுத்தி அதன் எண்ணத்தை மாற்ற முடியும்? ஆகவே இஸ்ரேலுடனுன ராஜீயத்தொடர்பை முறித்துக்கொள்ளும் முடிவை அரசாங்கம் மாற்றிக்கொள்வது சாலச் சிறந்தது.

ச. சதானந்தன்,
கோவில்வீதி,
யாழ்ப்பாணம்.

## வேற்றுமை இராதென்றே நம்பலாம்

தமிழ் மக்களதும், சிங்கள மக்களதும், பிற இனத்தவரதும் வாக்குகள் பெற்று மிகப் பெரும்பான்மை ஸ்தானங்களைப்பெற்று உலகமே வியக்கும் வண்ணம் கூட்டு முன்னணி அரசாங்கத்தை அமைத்துள்ளது.

மற்றும் சுதந்திர நாடுகளில் பல பாஷைகள் பேசும் பல இன மக்கள் வாழுகின்றனர். ஆனல் இலங்கையைப் பொறுத்தவரை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகியவர்களே வாழ்கின்றனர். இவர்களுக்கிடையே அன்றுதொட்டு இன்றுவரை கலப்பு மணங்களும் நிகழ்ந்துவருகின்றன. எனவே கூட்டு முன்னணி ஆட்சியில் இன, மொழி வேற்றுமைக்கு இடமிராது என அரசாங்க அமைப்பிலிருந்தும், சிம்மாசனப் பிரசங்கத்திலிருந்தும் மிக்க தெளிவாகத் தெரிகின்றது.

அரசாங்கமும், பிரதமர் சிறிமாவும், அவரது சுதந்திரக்கட்சியும் மற்றும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் வாழ்க.

ஏ. கே. செல்லையா
யாழ்ப்பாணம்.

## சுருட்டுத்தொழிலை கார்ப்பரேஷன் ஆக்குக

சுருட்டுத் தொழிலைக் கார்ப்பரேஷன் ஆக்க வேண்டும்.

இலங்கையின் முக்கிய கைத்தொழில்களில் சுருட்டுத் தொழிலுமொன்று சுமார் 2,500 குடும்பங்கள் இத் தொழிலைநம்பியுள்ளன. இவர்களின் வாழ்க்கை கவலைக்குரிய தொன்றாக வுள்ளது.

சுருட்டுத் தொழிலாளருக்கு மாதக்கணக்காகச் சம்பளம் கிடைப்பதில்லை. தொழிற்சங்கத் தீர்மானப்படி எல்லா முதலாளிகளுக்கும்1000சுருட்டுக்கு15 ரூபா கூலிவழங்குவதில்லை. சிலர் 14 ரூபாவும் சிலர் 13 ரூபாவும் வழங்குகின்றனர். எதிர்த்தால் வேலையை இழக்கவேண்டிவரும்.

சுருட்டுத் தொழிலை நம்பி சுமார் 50 ஆயிரம் குடும்பங்கள் புகையிலை பயிரிடுகின்றனர்.

சுருட்டுக்கைத் தொழிலைக் கார்ப்பரேஷனுக்கினுல் புகை... சுருட்டைக்கடைக்காரர் 50 ரூபாவுககு விற்கிறர், தரங் குறைந்த புகையிலையைச் சுருட்டுக்கு விட்டு இந்த முதலாளிமார்தாங்கள் அதாயம் பெறுகின்றனர். இதனல் சுருட்டின் தரம்குறைந்து பாவனையாளர்கள் சுருட்டை வெறுக்கும் நிலை ஏற்படுகிறது. கட்டுப்பாடு ஆக்கினல் நல்ல ரகமுடைய புகையிலையினுல் நல்ல சுருட்டைஉற்பத்திசெய்துபாவனையாளருக்கு விற்பனை செய்யலாம். இரண்டு, மூன்று திணிசாக உற்பத்தி செய்து இதன்விலையைக் கட்டுப்படுத்தலாம். இதன் உற்பத்தியை முதலாளி மார்களிடமிருந்து பறித்து கார்ப்பரேஷன் ஆக்கி இயங்கினல் இதன்மூலம் தொழிலை அபிவிருத்தி செய்யலாம். இதனல் தொழிலாளர்கள் கட்டுப்பாடா இயங்குவர். கூலிப்பிரச்னைக்கு இடமிராது சேமலாப நிதி தொழிலாளர் உரிமைகள் கிடைக்

## ஐயாறன் எழுதுவது

'இந்த முறை நயினதீவு தேருக்கு வருவீர்களா?' என்று சில நாட்களுக்கு முன் ஓர் அன்பர் கேட்டார். அந்த அம்பாள் அழைத்துக் கொண்டு போனல் வருவேன் என்று சொன்னேன். சற்றும் எதிர்பாராமல் அம்பாளும் அழைத்துச் சென்றார்.

குறிகாட்டுவானில் ஒரு படகில் ஏறினேம். ஐம்பது பேர் ஏறலாமென்றனர். மேலும் மேலும் ஆட்களை ஏற்றினர். கேட்டதற்கு 62 பேர்வரை ஏறலாமென்றனர். பாலைதீவு போல் ஏற்பட்டுவிடுமோ என்று கூடத்தோன்றியது ஒரு அதிகாரி படகுக்குள் எட்டிப்பார்த்துவிட்டுப் போய்விட்டார். ஏன் இவ்வளவு அதிகமானவர்களை ஏற்றுகிறீர்? என்று கேட்டதற்கு இன்றுதான் வருமானம்சுகமாகச்செல்லவேண்டுமானல் தனியாக ஒரு படகை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளுங்கள்' என்று படகுக்காரர் ஒருவா வாய்த்துடுக்குடன் கூறினர் பொலிசும் சம்பந்தப்பட்டவர்களும் கவனித்து இனி இவ்விதம் நடக்காமல் தடுக்க வேண்டுமென்றே இதை எழுதுகின்றேன்.

சென்ற வருடங்களில் விபத்துக்கள் ஏற்பட்டு பல உயிர்கள் மாண்டுள்ளன. என்றாலும் மக்கள் உயிர்களைவிட காசுதான் பெரிதென்று மதிக்கும் பணப் பேய்களிலிருந்து மக்களை காக்க ஏதும் செய்ய முடியாதா?

0 0 0

பிள்ளையாரும் முருகனும் முன்னே • செல்ல, நாகபூஷணி அம்மை, கோவிலுக்குள்ளிருந்து அழகாக வந்து கொண்டிருந்தார் விபூதி, ருத்ராட்ச மாலைகளை அணிந்து தலைக்கு ஒரு சிவப்பு சரிகைப்பட்டு கட்டிக்கொண்டு குருக்களவர்கள் அம்மனுடன் வந்து வழிபாடாற்றியது இத்திருவிழாவுக்கே ஒரு பொலிவு அளித்தது.

மக்கள் கூட்டம் ஏராளம். பெண்கள்தான் அதிகம். தேரை நான்கு முகமுள்ள 'பிரம்மணி' முன்னிருந்து கம்பீரமாக ஓட்டுகிறார். இருவடங்களை நூற்றுக்கணக்கான பக்தர்கள் சேர்ந்து பிடித்து தேரை இழுத்த சமயம், சில தாய்மார்கள் வடத்தை கையால் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு சென்றனர். இதைப்பார்த்ததும், அம்மன் தேரை தாய் செய்வது பெண்கள்தான். அவர்களுக்கும் தேரை இழுக்கும் பணியில் சரிசம பங்கை ஏன் அளிக்கப்படாது? அவர்கள் இதனல் மகிழ்ச்சியும் மன நிறைவுமடையலாம். ஆண்களோடு பெண்களும் சரி நிகர்சமானமாக வாழ்வர்.

0 0 0

பலநீண்ட 'கியூ' வரிசைகளை அங்குபார்த்தேன். அர்ச்சனைத் தட்டுகளைக் கையில் வைத்துக்கொண்டு ஆண்கள் ஒரு புறமும், பெண்கள் மறுபுறமுமாகக் காத்துக்கிடந்தனர். அன்னதானங்கள் அமோகமாக நடந்தன. பல பஜனைகோஷ்டிகள் இன்னிசையுடன் பக்தியுடன் பாடினசிலர் மெய்மறந்து ஆடினர். அக்காட்சிகளையெல்லாம் காண இரண்டு கண்போதா.

திரும்புகையில் படகில் ஏற சுமார் ஒருமைல் தூரத்துக்குமேல் நீண்ட 'கியூ' வரிசையில் மகள் வெயிலிலே நின்று கொண்டிருந்தார்கள். வெயில் தாங்காமல் ஒரு பெண் மூர்ச்சையாகிவிழுந்துவிட்டதைக் கண்டேன். அந்த இறங்கு துறையிலிருந்து திருவிழாக் காலத்திலாவது ஒரு தட்டுப்பந்தல் போடமுடியாதா? தினசரி பல பஸ்ஸுகளில் தென்னிலங்கையிலிருந்து யாத்திரீகர்கள் இங்குவருகிறார்கள். அம்மக்கள் நினைத்தால், நிரந்தரமாகவே ஓர் ஏற்பாடு செய்துவிடக்கூடும். ஆனல் அவ்வூர் மக்கள் சேர்ந்து இந்த தர்மத்தை அங்கு செய்து பல அடியார்களின் கஷ்டத்தைக் குறைக்க முன்வருவார்களாக!

0 0 0

வேலணை திருமுருகன் தண்ணீர்ப் பந்தலை தேருக்கு மறுநாளுடன் நிறுத்திவிடலாமோ என்று யோசித்தனராம். ஒரு பெரியவரைக் கேட்டதற்கு திருவுளச்சீட்டு போட்டு தீர்மானிக்கலாமென்றாராம் அவர். இன்னும் இரண்டு நாட்களுக்கு இந்த தர்மத்தை நீடிக்க வேண்டுமா? என்று சீட்டுப் போட்டுப்பார்த்ததில் 'ஆம்' என்று உத்தரவு வந்ததால், அவ்விதமே செய்யத்தீர்மானித்ததாக அறிந்தேன். வருடமனைத்தும் இத்தர்மத்தை நடத்தவேண்டுமா? என்று கேட்டிருந்தால், அதற்கும் 'ஆம்' என்றே பதில் கிடைத்திருக்கும். மக்கள் பணிதானே மகேசன் பணி. இவ்வித நல்ல தர்மம் செய்யக்கூடிய சந்தர்ப்பம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ளன. மன்னார் பகுதியில் மட்டுமல்ல வடபகுதியில் இராணுவத்தாக்குதல் சம்பவங்கள் நடைபெறுவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

தள்ளாடி இராணுவமுகாமைச்சேர்ந்த சில இராணுவச் சிப்பாய்கள் முகாம் அதிகாரியின் அனுமதியில்லாமல் நள்ளிரவில் முகாமிலிருந்து சாதாரண உடையில் புறப்பட்டு கூட்டுறவுச் சங்கத்துக்குரிய ஒரு மோட்டார் லொறியைத்தடுத்து நிறுத்தி அதன் சாரதியைத் தாக்கி லொறிக்குள் போட்டுக்கொண்டு வங்காலைக் கிராமத்துக்குச் சென்று தீ வைத்தும் மக்களைத் தாக்கியும் அட்டகாசம் செய்திருப்பதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. அப்பகுதி மக்கள் மினரை மாற்றுவதால் இப்பகுதி மக்கள் அச்சமின்றி வாழவும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினருக்குப் பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்குமென்றோ எதிர்பார்க்க முடியாது.

கடந்தகாலச் சம்பவங்களை மனதில் கொண்டும் மக்கள் தங்கள் சொந்த இடங்களிலேயே நிம்மதியாகவும் அச்சமின்றியும் சுதந்திரமாகவும் வாழவும் பரீட்சார்த்தமாகவாவது மன்னாரிலும் வடபகுதியிலுமுள்ள இராணுவமுகாம்களை ஆறு மாத காலத்துக்காவது மூடிவைத்து அவர்களின் கடமையைப் பொலிசாரிடம் ஒப்படைத்துப் பார்த்தால் என்ன நஷ்டம்?

## ‘வீட்டுக்கு போவதாக ‘சொன்னவர்’ இறந்து விட்டதாக அறிந்தேன்

வல்வெட்டித்துறை, சனி

"இவ்வழக்கில் முன்னர் சாட்சியமளித்தவர் எனது சகோதரர் வல்லிபுரம். சம்பவம் நடந்த இரவு எனது தம்பியார் பணம் சம்பந்தமாக எனது வீட்டுக்கு வந்தார். நான் அன்று பணம் இல்லை அடுத்தநாள் வரும்படி கூறினேன். எனது வீடு அவரது வீட்டிலிருந்து கால்மைல் தூரமளவு இருக்கும் அவர் எனது வீட்டுக்குவந்து போகவேண்டுமானால் சம்பவம் நடந்த இடமான அரசடிவீதி இலவுச் சந்தியைக் கடந்து தான்போகவேண்டும். எனது தம்பியார் வீட்டை விட்டுச் செல்லும் போது தனது வீட்டுக்கே போவதாகத் தான் சொல்லிச் சென்றார். காலம்சென்றவர் இறந்து விட்டதாக பற்றி அடுத்தநாட்காலை தான் அறிந்தேன்." கரவெட்டி மேற்கைச்சேர்ந்த வியாபாரியான சிற்றம்பலம் கந்தையா பருத்தித்துறை மாஜிஸ்திரேனுதிருகே.வீ.கனராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு கரவெட்டியைச் சேர்ந்த கே. வன்னியசிங்கம், எஸ். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் கடந்த சித்திரை மாதம் 4-ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த வே. ஆனந்தனை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டது. மேலவிசாரணை இம்மாதம் 23-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நெடுந்தீவு பஸ்சேவை

வேலணை, சனி

இங்கு சேவையில் விடப்படும் பஸ் அடிக்கடிபழுதாகுவதால் பஸ்சேவை சரிவர நடைபெறுவதில்லை என நெடுந்தீவு மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

## அமைச்சர்..

1-ம் பக்கத் தொடர்ச்சி

### உபதபாலதிபர்கள் சந்திப்பர்

தபால் மந்திரி திரு. செல்லையா குமாரசூரியரை உபதபாலதிபர்கள் இம்மாதம் 27-ம் திகதி காலை சந்தித்து தங்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதோடு சில கோரிக்கைகளையும் சமர்ப்பிப்பார்கள் தபால் மந்திரி திரு குமாரசூரியர் அன்று காலை யாழ்ப்பாணம் தபால் கந்தோருக்கு நேரில்சென்று அங்குள்ள நிலையை பார்வையிடுவார் அன்று யாழ்ப்பாணம் தபால் கந்தோரைச் சேர்ந்த தபால்தந்தி ஊழியர்கள் மந்திரிக்கு தேநீர் விருந்து அளிப்பார்கள் நல்லூரில் உபதபால்கந்தோர் ஒன்று நிறுவித்தரும்படி மாநகரசபை உறுப்பினர்கள் சிலர் மந்திரியிடம் கோருவார்கள் என மாநகரசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் (குவிம)

## சமய பாதுகாப்பு இருக்கும்

இலங்கை மக்களின் சமயங்களையும், கோயில்களையும், மக்களின் பக்தி மார்க்கத்தையும் சிறிமாவோ அரசாங்கம் பாதுகாத்துத் தருமென்பது எங்கள் பூரண நம்பிக்கை பிரதமர் சிறிமாவோ அடிக்கடி கதிர்காமம் சென்று கடவுளை வழிபடுவது இதற்குச் சான்ருகும்' தேர்தலில் அமோக வெற்றிபெற்ற பின்னும் பிரதமர் கதிர்காமம் சென்று வணங்கித் திரும்பினூர். கதிர்காமத்துடன் நில்லாது, பிரதமரும், மந்திரிகளும், அரசாங்கத்தரப்பு எம். பிக்களும் அனுராதபுரம் சென்று ஸ்ரீமகாபோதி விகாரையில் விசேட பூசை செய்து வணங்கினூர்கள். பிரதமரும் ஆட்சிமன்றத்திலுள்ள மந்திரிமாரும், எம். பி.க்களும் சமயப்பற்றும் கடவுள் பக்தியும் உடையவர்கள்.

இலங்கை ஒரு பௌத்த நாடு. இலங்கையில் பௌத்த சமயம் மேலோங்கி வளருகின்றது. அகிம்சா, பரமோ தர்மத்தைக் கைக்கொண்டொழுகும் நாடும், புத்த பெருமானின் பஞ்சசீலக் கொள்கைகளை அனுஷ்டிக்கும் நாடும் இலங்கை ஆனதால் சைவம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்களைச் சிறிமாவோ அரசாங்கம் பாதுகாக்குமென்பது எங்கள் பூரண நம்பிக்கை.

நா. சேனுதிராசா

யாழ். சைவசித்தாந்த சங்கத் தலைவர்

சுழிபுரம்.

## குருபூசை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கந்தர்மடம் சிவகுருநாத பீட ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் வருஷக் குருபூசை நிகழும் ஆனி மாதம் 8-ம் நாள் 22-6-70 திங்கட்கிழமை காலை அபிஷேக ஆராதனையும் பின்புமகேசுர பூசையும் நடைபெறும்.

மானிப்பாய்

## அந்தோனியார் திருநாள்

மானிப்பாய், ஞாயிறு

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் நேற்றுமுன் தினம் பெரியபாடல் பூசையுடனும் திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவடைந்தது. பெருந்திரளான பக்தர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். அத்திபாரமிடப்பட்டு வேலைகள் தொடங்கப் படாமலிருக்கும் புதிய கோயிலை விரைவில் கட்டி முடிக்கவேண்டும் எனவும் அக்கோவிலிலேயே அடுத்த வருட உற்சவத்தை கொண்டாட வேண்டுமெனவும் வண. கட்டளைக்குரவர் கேட்டுக்கொண்டார்.

## தபால்பெட்டி சேதம்

கைதடி, ஞாயிறு

கைதடிப்பகுதியில் நேற்று இரவு ஓர் தபால் பெட்டி தகர்த்து எறியப்பட்டுள்ளது. இது விஷயமாக தபால் இலாகவுக்கும் பொலிஸ் பகுதியினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையை

# யாழ்ப்பாணம் பின் பற்ற வேண்டும்

கொழும்பு மாநகரஎல்லைக்குள் அமைந்திருக்கும் தியேட்டர்களில் பகற்காட்சிக்கு மாணவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாதென்ற செய்திகண்டுமகிழ்ந்தேன் இன்று வாலிபர் மத்தியில் நிலவும் அமைதியின்மைக்குப் பெருமளவில் காரணமாயிருப்பது சினிமாதான். தமிழ்ப்படங்களில் மலிந்திருக்கும் ஆபாசக் காட்சிகள் கீழ்த்தரமான ஆங்கிலப் படங்களிலும் பாரிக்க மோசமாகிவிட்டன. இவற்றை நம்வாலிபர் அடிக்கடிபார்த்து பெற்றாருக்கும் தமக்கும் தீமையை ஏற்படுத்திக் சொள்கிருர்கள்.

யாழ்ப்பாணத்திலும் இம்முறைகொண்டு வரப்படவேண்டும். மாநகர அதிகாரிகள் இதை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஆவனசெய்ய வேண்டும்.

த. நவரத்தினம்

யாழ்ப்பாணம்.

# குடும்பக்கட்டுப்பாடு அவசியம்தானு?

குடும்பக்கட்டுப்பாடு அவசியமா? மேலும்சிறுபான்மை இனமாகிய தமிழினத்துக்கு அது அவசியமா? இந்த நாட்டுச் சனத்தொகை ஒன்றேகால்கோடியில் ஏறக்குறைய முப்பது லட்சம் மக்களே தமிழர். அவர்களுள்ளும் பாதிப்பேருக்கு மேல் தோட்டங்களில் நலியும் இந்திய வம்சாவழியினர் இவர்களிலும் இந்நாட்டிலே இருக்கப்போகிற ஒவ்வொரு மூவருக்கும் எழுவரை நாடுகடத்தச் சிறிமா-சாஸ்திரி உடன்பாடு வழிவகுத்துள்ளது. இந்நிலையில் குடும்பக் கட்டுப்பாட்டின் மூலம் மேலும் நமது தொகையை வெட்டிக்குறைக்கும் நடவடிக்கை இனத் துரோகமாகாதா? முஸ்லிம் சிங்கள மக்களிடையே இக்கட்டுப்பாடு எவ்வளவுக்குப் பலனளித்துள்ளது.

தமிழ்மக்கள் நாகரிகத்தில் சிறந்தவர்கள். பொறுமை உடையவர்கள். துன்பத்தைத் தாங்கும் பண்புள்ளவர்கள். முயற்சி உடையவர்கள். அறிவும், ஆற்றலும் மிக்க இவர்கள் பொருளாதாரக் காரணங்களுக்காக இன ஒழிப்பு நடவடிக்கையாகிய குடும்பக்கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்வது சுயநலமே.

ராஜாஜீ, குடும்பக்கட்டுப்பாட்டை எதிர்த்துள்ளார். மகாத்மா காந்தியடிகள் செயற்கைமுறைக் கட்டுப்பாடுகளை முழுவதாக எதிர்த்தவர். செயற்கைமுறைக் கட்டுப்பாடுகள் உடல் நலனைப் பொறுத்தமட்டில் பாதகமான அநேக பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பது விஞ்ஞான உண்மை கருச்சிதைவை ஏற்படுத்தும் நச்சு மருந்துகள், குளிகைகள் கெடுதலை ஏற்படுத்தாவா என்பதை நாம் யோசிக்கவேண்டும். இம் மருந்துகள் இன்னும் பரிசோதனைகளுக்குள்ளாகி மாற்றம் பெற்றுவரும் நிலையில் உள்ளன.

சீனு போன்ற மிகக் குடிசன நெருக்கமுள்ள நாடுகள் கருச்சிதைவு மூலம் சிசுக்கொலைசெய்துவளமாகவாழவில்லை. குறுகிய நோக்கங்களுக்காக ஏற்பட்ட குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை வானொலிகளும், சில பத்திரிகைகளும் ஆதரிப்பது மிகத் துரதிர்ஷ்டமாகும்.

அ. சுப்பிரமணியம்

சுவாமியார் வீதி,

யாழ்ப்பாணம்.

வும் வழங்கு[illegible]ன்றனர். எதிர்த்தால் வேலையை இழக்கவேண்டிவரும்.

சுருட்டுத்தொழிலை நம்பி சுமார் 50 ஆயிரம் குடும்பங்கள் புகையிலை பயிரிடுகின்றனர்.

சுருட்டுக்கைத் தொழிலைக் கார்ப்பரேஷனுக்கினூல்புகையிலை உற்பத்தியாளரும் சுருட்டுத் தொழிலாளரும் நன்மை பெறுவர்.

ஒரு முதலாளி கடைக்கு 1000 சுருட்டை 32 ரூபாவுக்கு அனுப்பி அந்தத் தொழிலாளரிடமிருந்து பறித்து கார்ப்பரேஷன் ஆக்கி இயங்கினுல் இதன்மூலம் தொழிலை அபிவிருத்தி செய்யலாம். இதனூல் தொழிலாளர்கள் கட்டுப்பாடகா இயங்குவர். கூலிப்பிரச்னைக்கு இடமிராது சேமலாப நிதி தொழிலாளர் உரிமைகள்கிடைக்கும். மற்றும் அரசாங்க ஊழியர்கள் மாதிரியாகத் தமது வாழ்க்கையை இவர்களும் நடாத்துவார்கள்.

இப்போது இயங்குமாப்போல் இருந்தால் இன்னும் 5 வருடங்களில்இத்தொழில் அற்றுப்போய் விடும்.

அரசாங்கம் சுருட்டுத் தொழிலாளருக்கும், புகையிலை உற்பத்தியாளருக்கும் ஒரு விமோசனத்தை ஏற்படுத்தி ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கவேண்டும் அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கமும் இதற்கு ஆதரவு அளித்து, சுருட்டு முதலாளிமார்களின் பிடியிலிருந்து இதனை ஒரு கார்ப்பரேஷனுக்கிப் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றவேண்டும்.

ச. கார்த்திகேசு,

திருமகள் வீதி,

நாயன்மார்க்கட்டு,

யாழ்ப்பாணம்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

## வட்டார இடைத்தேர்தல்

பச்சிலைப்பள்ளி, சனி

முள்ளிப்பற்றுக் கிராமசபையின் 6ம் வட்டார இடைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் இம்மாதம் 23ம் திகதி முள்ளிப்பற்றுக்கிராமசபை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப் படவிருக்கிறது. முன்னுள் அங்கத்தவர் திரு. க. மரியாம்பிள்ளை அரசாங்க உத்தியோகம் பெற்றுச் சென்றமையால் மேற்படி ஸ்தானம் காலியாகியது.

இருவடங்களை நூற்றுக்கணக்கான பக்தர்கள் சேர்ந்து பிடித்து தேரை இழுத்த சமயம், சில தாய்மார்கள் வடத்தை கையால் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு சென்றனர். இதைப்பார்த்ததும், அம்மன் தேரை தாய்மார்களும் ஒருபக்கம் வடத்தைப் பிடித்து இழுத்தால் என்ன என்று பட்டது. பக்கத்திலிருந்த ஒருதாயைக் கேட்டேன். எங்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தால் நாங்களும் இழுக்கத்தயாராக இருக்கிறோம் என்று சிரித்துக்கொண்டே ஆர்வத்துடன் சொன்னூர். தேர் இழுபடுமா? என்று கேட்டதற்கு, ஏன் இழுபடாது?" என்று திருப்பிக்கேட்டார்

கொழும்பிலே ராமநாதன் கோவில் அம்மன் தேரை, தாய்மார்களே இழுப்பதைப் பார்த்திருக்கிறேன். நயினுதீவிலே ஆண்கள் ஒருவடத்தையும் பெண்கள் ஒருவடத்தையும் பிடித்து இழுத்து அம்மன் கைங்கரியத்தில்ஈடுபட்டால் பலவிதங்களிலும் அது நன்மைதராலம் ஊர் மக்கள் ஒற்றுமைப்படவே தேரைப் பெரிதாகக்கட்டி எல்லோரும் சேர்ந்துஇழுக்க பெரியோர்கள் ஏற்பாடு செய்திருக்கிருர்கள் சமூகத்தில் சரிபாதிப்பேர் பெண்கள் நம் இலங்கையையும் இந்தியாவையும், பிரிட்டனையும் இப்போது ஆட்சி செய்ததாக அறிந்தேன். வருடமனைத்தும் இத்தர்மத்தை நடத்தவேண்டுமா? என்று கேட்டிருந்தால், அதற்கும் ‘ஆம்’ என்றே பதில் கிடைத்திருக்கும். மக்கள் பணிதானே மகேசன் பணி. இவ்வித நல்ல தர்மம் செய்யக்கூடிய சந்தர்ப்பம் வேறு எங்கே யாருக்குக் கிடைக்க முடியும்?

0 0 0

நயினைத்தேரிலே, போர்ச்சுகீசர் முன்னர் இங்கிருந்த கோயிலை இடித்து, தேரைத் தகர்த்து கடலில் தள்ளும் கதைகளை உணர்ச்சிமிக்க முறைகள் கலை அழகுடனே மரங்கள் கூறுவதை. ஓர் அன்பர் காட்டினூர்: அதை அப்படியே படம்பிடிப்பதுடன் 'புதுக்கோயில் புதுத் தேர் படங்களையும் போர்ச்சுகீய நாட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பவேண்டும் போல் தோன்றியது. கோயிலை இடிப்பதால் இந்து சமயம் அழிந்துவிடாதென்பதை அவர்களுக்கும் அவர்கள் போன்றவர்களுக்கும் உணர்த்தலாமல்லவா; ஆனுல் அப்பத்திரிகைகள் இப்படங்களை பிரசுரிக்குமா;

0 0 0

குறிகளும் மடையாளமுங் கோயிலும், நெறிகளும் மவர் நின்றதோர் நேர்மையும். அறியஆயிரம் ஆரணம் ஓதியும், பொறியிலீர் மனமென் சொல்புகாதமே.

—அப்பர் அடிகள்

# மன்னுர் ராணுவ முகாமில் புதிய வீரர்கள்

## தாக்குதல் சம்பவத்தையொட்டி நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி.

மன்னுர் பகுதியிலுள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் நேற்று கொழும்பிற்குத் திருப்பி அழைக்கப் பட்டுள்ளார்கள் இவர்களுக்குப் பதிலாக புதிய ராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

வங்காலைப் பகுதியில் நடந்த ராணுவத் தாக்குதல் காரணமாக மனேகரன் ரூ, ஏபிரகாம்குருஸ், அல்போன் சில்வா, சகுந்தலா சில்வா, அந்தோணி ஆகியோர் மன்னுர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், இராணுவத்தினர் மூன்று வீடுகளுக்குத் தீவைத்ததாகவும், ஒரு வீடு முற்ருக எரிந்து விட்டதாகவும், இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகின்றது. இம்மாதம் 18-ம் திகதி இரவு 11 மணியளவில் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான லொறியில் இராணுவத்தினர் சாதாரண உடையில் சென்று தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார். வி. ஆர். பிரான்சிஸ், சொய்சா, கணபதி, பீரிஸ் ஆகியோர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன,

இராணுவ வீரர் சம்பந்தப் பட்டதாகக் கூறப்படும் இந்த அசம்பாவிதம் குறித்து ஸ்தல விசாரணை நடத்துவதற்கு இராணுவ மேஜர் இராமநாயக்கா மன்னுர் வந்துவ்ளார்.

வங்காலைக் கிராமப்புற மக்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தாள்ளாடி இராணுவத் தலைமை அதிகாரி கெனல் டேவிட், மேஜர் ரி எம். தாஜுடீன், திரு பெரேரா ஏ எஸ் பி, மன்னுர் அரசாங்க அதிபர் திரு கதிர்காமநாதன் ஆகியோரும், சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று ஆறுதல் கூறினூர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org